விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 060 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 05 வியாழக்கிழமை (17.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச் திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



## பயங்கரவாத சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி


### யாழில் கையெழுத்து வேட்டை



6ஆம் பக்கம் பார்க்க

## தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் 6 கட்சிகள் ஏற்பாட்டில் யாழில் கருத்தரங்கு

### மாவை பங்கேற்கவில்லை



(யாழ்ப்பாணம்)

ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் "ஈழத்தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலைவரங்களும்" எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற் 15

## தமிழர்களுக்கு பாராளுமன்றம்

# ஒருபோதுமே தீர்வைத் தராது

### நாமே தீர்வைப் பெறவேண்டும் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



*(யாழ்ப்பாணம்) பாராளுமன்றம் தமிழீழத் தமிழர் களுக்கு எந்தக் காலத்திலும் ஒரு தீர்வைத் தராது. ஆட்சியில் உள்ளவர்களுக்கு நெருக்குதல்களை உருவாக்கியே நாம் தீர்வைப் பெறவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.* *(15ஆம் பக்கம் பார்க்க)*

## குப்பிழான் தெற்கில் மரணமான பெண்ணுக்கு தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

குப்பிழான் தெற்கில் உயிரிழந்த 65 வயதுடைய பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம)

## வட மாகாணத்தில் மலேரியா அபாயம்

### சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

தற்போது வட மாகாணத்தில் மலேரியா நோய் பரவும் அபாயம் இருப்பதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை வெளியிட்டுள்ளனர்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் 15

## கொரோனா 25 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 25 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

இதன் அடிப்படையில் இலங்கையில் 15

## ஐ.நா தீர்மானங்களால் நல்லிணக்கம் ஏற்படாது

### வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

"ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களால் நல்லிணக்கம் ஏற்படாது. இலங்கை வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகின்றது. உள்ளகப் பொறிமுறையில் முன்னேற்றம் கண்டுள்ளது.

எனவே, சர்வதேசத் திடம் இருந்து நட்பு 15

## நாட்டில் மேலும் +1,217 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் ஆயிரத்து 217 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். 15

## பயங்கரவாத சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும்

### இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே ஆணைக்குழு இதனை அறிவித்துள்ளது. 15

## யாழ்.வருகிறார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால

(கொழும்பு)

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாட்டில் கலந்து கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர் 15

## பயங்கரவாத சட்டத்திலிருந்து விடுவிக்கப்படுவோருக்கான இழப்பீட்டை வழங்குவது யார்?

### அம்பிகா சற்குணநாதன் கேள்வி


(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பல வருடங்களாக தடுத்து வைக்கப்படும் நபர்கள், நிரபராதி என்று விடுதலை செய்யப்படக்கூடிய சம்பவங்களைப் பொறுத்தமட்டில், அத்தனை வருட காலத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட நிதி மற்றும் ஏனைய இழப்புக்கள், உளவியல் நெருக்கடி ஆகியவற்றுக்கான இழப்பீட்டை 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
19 – 06 – 1933



விண்ணில்
16 – 02 – 2022

## யாக்கோப் பெஞ்ஜமின் வில்லியம்

கண்டியைப் பிறப்பிடமாகவும் மாதா கோவிலடி, கரணவாய் கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட யாக்கோப் பெஞ்ஜமின் வில்லியம் அவர்கள் நேற்று (16.02.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேக்கப் - றெஜினா தம்பதியரின் அன்பு மகனும் மரியநாயகி (ரத்தினம்) அவர்களின் அன்புக் கணவரும் சீலன், செல்வி, வெலிங்டன், ஞானம், தாசன், நேசன், விஜி, ஜெயா, அருள் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராசாத்தி, குமார், ரூபி, றொபின், பாலராணி, வதனி, ஆசா, தஸ்மிலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.02.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மாலை 3.00 மணியளவில் மாதா கோவிலில் திருப்பலி நிறைவுற்றபின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கீரிப்பல்லி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-3794)

மாதா கோவிலடி, கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
076 420 5949
தகவல் :-
குடும்பத்தினர்

# வவுனியா விபத்தில் உயிரிழந்தவருக்கு

## கோவிட் தொற்று உறுதி

(வவுனியா)

வவுனியா, மரக்காரம்பளை வீதியில் நேற்று முன்தினம் காலை மூன்று மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன், இருவர் காயமடைந்திருந்தனர்.

இவ்விபத்தில் பண்டாரிக்குளம், அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த 32 வயதுடைய சிறிரஞ்சன் என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு அங்கு பி.சி.ஆர் பரிசோதனையும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று காலை வெளியான நிலையில் உயிரிழந்தவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த இளைஞருடன் தொடர்புகளை பேணியவர்கள் எவருக்கும் கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் காணப்படின் உடனடியாக அப்பகுதி சுகாதார பரிசோதகரை தொடர்பு கொள்ளுமாறு சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம)

# பாராளுமன்ற உறுப்பினர்

## ராஜிகாவுக்கு கோவிட்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்ரமசிங்கவுக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

நேற்று மேற்கொள்ளப்பட்ட கோவிட் பரிசோதனைகளில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)


## உடனடி வேலை வாய்ப்பு

தயாரித்த சிறுவர், சிறுமியர், நவநாகரீக நங்கையர்களின்
ஆடைகளை விற்பனை செய்வதற்கு ஆண், பெண்
இருபாலாரிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.
முன் அனுபவம், கல்வி அறிவு க.பொ.த சா.தா, உயர்தரம்.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பதாரிகள் 20/02/2022 இற்கு
முன்னதாக தொடர்பு கொள்ளவும்.

யாழ். நகர எல்லைக்குள் வசிப்பவர்கள்
விண்ணப்பித்தல் நல்லது. (10230)

074 099 1852


# மரண அறிவித்தல்

பிறப்பு
16 – 10 – 1945



இறப்பு
16 – 02 – 2022

## கமலாம்பிகை சிவலோகநாதன்

ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பிகை சிவலோகநாதன் அவர்கள் நேற்று (16.02.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் சின்னத்துரை (வைத்தியர்) - பூரணம் (அல்லைப்பிட்டி) தம்பதியரின் அன்பு மருமகளும் சிவலோகநாதன் அவர்களின் அன்பு மனைவியும் சிவாயினி (ஜேர்மனி), காலஞ்சென்ற சுதாயினி, சாமினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சன்முகரத்தினம் (ஜேர்மனி), கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் விதுசன், விஸ்னுகா, டனுஸ்தரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகேஸ்வரி, தியாகராஜா, காலஞ்சென்ற பத்மாவதி, காலஞ்சென்ற சறோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அன்னலட்சுமி, குகநேசன், ரத்தினேஸ்வரன், தியாகரதி, காலஞ்சென்ற சிவனேசன், காலஞ்சென்ற சத்தியசீலன், நாகலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.02.2022) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-3792)

இல. 94/2, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
தகவல் :-
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
16 . 10 . 1945



இறப்பு
16 . 02 . 2022

ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## சிவலோகநாதன் கமலாம்பிகை

அவர்கள் காலமான செய்தி அறிந்து
துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-3793)

சிறிநதியா நகை மாளிகை
NSR நகை மாளிகை
உரிமையாளரும் ஊழியர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவர்களை மீண்டும் கேட்டால் எவ்வாறு கொடுக்க முடியும்

## காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் நீதி அமைச்சர் அலிசப்ரி



(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மரணம் கூட அவரது குடும்பத்திற்கு இழப்பு என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதனால் தான் காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்க நினைக்கின்றோம் என நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.**

வார இறுதிப் பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

யுத்த காலகட்டத்தில் தமிழர் தரப்பில் பலர் காணாமல் போயுள்ளனர் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அவர்களின் உயிரை மீண்டும் தாருங்கள் என கேட்டால் எம்மால் கொடுக்க முடியாது.

ஆகவே தான் இந்த பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் பாதிக்கப்பட்ட தரப்பின் பக்கம் அதிக முக்கியத்துவத்தை கொடுத்து தீர்வுகளை வழங்க முயற்சிக்கின்றோம். காணாமல் போனோரின் குடும்பத்தினருக்கு செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து கொடுக்க அரசாங்கமாக நாம் தயாராக உள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு படைகளில் இருந்தே நான்காயிரத்திற்கும் அதிகமான எண்ணிக்கையானோர் காணாமல் போயுள்ளனர் என்றால் அதே எண்ணிக்கையில் அல்லது அதற்கும் அதிகமானோர் விடுதலைப் புலிகள் தரப்பிலும் காணாமல் போயிருக்க வேண்டும் என்பதே உண்மை.

விடுதலைப் புலிகளும் மிகப் பலமான சகல ஆயுத குழுக்களையும் கொண்ட அமைப்பாக இருந்தனர். ஆகவே பலமான இரண்டு தரப்புக்கு இடையிலான நேரடி யுத்தமொன்றே இங்கு இடம்பெற்று முடிந்துள்ளது. ஆகவே நடந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் உயிரை மீண்டும் தர முடியாது. யார் காணாமல் போனவர்கள் என்ற தகவல்களை எமக்குத் தாருங்கள்.

அவர்கள் குறித்து நாம் விசாரணைகளை நடத்தி அதன் பின்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என அவர் தெரிவித்தார். (நி-5)

## கொரோனா வைரஸ் பரவல் உலகில் ஒழியாமல் போகலாம்

### விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

புதிய வகைகளாக உருமாறுவதன் மூலம் கொரோனா வைரஸ் பரவல் உலகில் ஒருபோதும் ஒழியாமல் போகலாம் என அமெரிக்க விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

வைரஸ்கள் சில மாதங்களுக்கு ஒருமுறை புதிய தன்மைகளுடன் கூடிய அவதாரமெடுத்து தமது பரவலைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். பல்வேறு கொரோனா தடுப்பூசிகளை உருவாக்கிவிட்டு, அதனை ஏராளமானவர்களுக்கு செலுத்திவிட்டதாக நாம் பெருமைப்பட்டுக்கொண்டு இருக்கும்போது, புதிய வகை கொரோனாக்கள் உருவாவதை நாம் மறந்துவிடக் கூடாதுஎன்று எச்சரித்துள்ளனர்.

ஒமிக்ரோன் வகை கொரோனா ஏராளமானவர்களுக்குப் பரவி, அதிக உடல்நல பாதிப்பை ஏற்படுத்தாமல் மறைந்து விடுவதால், சமூக நோய்த் தடுப்பாற்றல் கிடைத்து விடும் என்று நினைப்பது தவறான கணிப்பு என்று ஹாவ்ஸ்டன் மருத்துவக் கல்லூரி நிபுணர்கள் தெரிவித்தனர்.

எனவே, தற்போதைய சூழலைக் கொண்டு கொரோனா உலகிலிருந்து மறைந்துவிடும் என்று கருதிவிட முடியாது அலட்சியமாக இருந்தால், அது புதுப் புது உருவங்களில் தொடர்ந்து பரவி ஒருபோதும் அழிக்க முடியாமல் போனாலும் போகலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (நி-5)

## குவைத் அரசின் நிதியுதவியுடன் 66 பாலங்கள் புனரமைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை திட்டத்தின் கீழ் மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் நாட்டின் ஏழு மாகாணங்களை உள்ளடக்கிய 66 பாலங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளும் தரப்பு , அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த 66 பாலங்களை புனரமைக்கும் திட்டத்திற்கு குவைத் அரசு நிதியுதவி வழங்குகிறது எனவும் இந்த 66 பாலங்களும் 3 வருடங்களுக்குள் புனரமைக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## மரணத்தின் பின்னரான பி.சி.ஆர் கட்டாயமில்லை- சுகாதாரப்பிரிவு

(கொழும்பு)

மரணத்திற்கு பின்னர் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகள் இனிமேல் அவசியமில்லை என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வீட்டிலோ அல்லது மருத்துவமனைகளிலோ உயிரிழப்பவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் அவசியமில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், தேவைப்படுமாயின் சட்ட மருத்துவரின் விருப்பத்துடன், பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என குறித்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளது

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

போதுமானளவு எரிபொருள் கையிருப்பிலுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதனால், மக்கள் வரிசையில் நின்று எரிபொருளை கொள்வனவு செய்ய வேண்டியதில்லை என கூட்டுத்தாபனத்தின் தலைவர், சட்டத்தரணி சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நேற்றும் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் மக்கள் வரிசையில் நிற்பதை அவதானிக்க முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## மிச்சேல் பச்லெட்டின் அறிக்கையை பாராளுமன்ற விவாதத்திற்கு கோரும் எதிர்க்கட்சி

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. மேலும் குறித்த அறிக்கை மீதான விவாதம் நடத்த வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் வலியுறுத்தி யுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

மிச்சேல் பச்லெட்டின் அறிக்கை அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளமையை சுட்டிக்காட்டிய அவர், அது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (நி-5)

B.A பேராதனை பல்கலைக்கழகம்
(வெளிவாரி)
100 LEVAL, 200 LEVAL
மேற்படி பல்கலைக்கழகத்தினால் 2ஆம் ஆண்டிற்கான (200 Leval) பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 1ஆம் ஆண்டு பரீட்சை (100 Leval) எழுதியவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
● 1ம், 2ம் ஆண்டிற்கான விரிவுரைகள் நடைபெறுகின்றன.
விபரங்களுக்கு
S. அருள்நங்கை
(நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
☎-021 222 8148
(சி-3790)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது போட்டியிலும் தோல்வி தொடரை இழந்தது இலங்கை

இலங்கை கிரிக்கெட் அணிக்கெதிரான மூன்றாவது இருபது 20 போட்டியில், அவுஸ்ரேலியக் கிரிக்கெட் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட இருபது 20 தொடரில் 3-0 என்ற கணக்கில் முன்னிலைப் பெற்றுள்ள அவுஸ்திரேலியா அணி, தொடரையும் வென்றுள்ளது.

கன்பெர்ரா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 121 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, தசுன் சானக ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் தினேஷ் சந்திமால் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், கேன் ரிச்சட்சன் 3 விக்கெட்டுகளையும் ஜோஸ் ஹெசில்வுட், ஆஸ்டன் அகர் மற்றும் க்ளென் மேக்ஸ்வெல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.



இதனைத் தொடர்ந்து 122 என்ற வெற்றி இலக்கை நோக்கி, பதிலுக்கு களமிறங்கிய அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, 16.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, க்ளேன் மேக்ஸ்வெல் 39 ஓட்டங்களையும் ஆரோன் பின்ஞ் 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், மகேஷ் தீக்ஷன 3 விக்கெட்டுகளையும் ஜெப்ரி வெண்டர்சே 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சாளர் கேன் ரிச்சட்சன் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான நான்காவது இருபது 20, நாளை 18 ஆம் திகதி மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (4)



வடமாகாணத்தில் இருந்து வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி, எதிர்வரும் 25 ஆம் திகதி துபாய் நாட்டில் நடைபெறவுள்ள உலக கிண்ண kick boxing தெரிவு போட்டிக்கும் மற்றும் மல்யுத்த சர்வதேச போட்டிக்கும் செல்லவுள்ள 14 வீர, வீராங்கனைகளை, நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள நியூ லலிதா நகைமாளிகை குழுமத்தினர் கௌரவித்து பாராட்டினார்கள். மேலும் வீர வீராங்கனைகளை ஊக்கிவிக்கும் நோக்கில் 10,000 ரூபா பணத்தினையும் அவர்கள் வழங்கினார்கள்.

(படம் - கஜிந்தன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2514

**கருணா**



பனி இல்லாத மார்கழியா



கறி இல்லாத ஞாயிற்றுக்கிழமையா....

**யதுஷா**

எல்லா சோப்பு விளம்பரத்திலும் பொண்ணுங்க குளிக்கிற மாதிரியேகாட்றீங்களே..!



ஏண்டா எங்கள பார்த்த குளிக்காத பண்ணாடை மாதிரி இருக்கா...



**தனுராஜ்**

காதலிக்கு தாஜ்மகால் கட்டிய அதிசயம் அன்று...



காதலியை கட்டினாலே அதிசயம் தான் இன்று...

**தாரகா**



சாப்பாட்ல கடைசியா ரசம் ஊத்தி சாப்பிடனும்னு சொல்றது தட்டை ஈசியா கழுவுறதுக்காக



ஏதோ ஒரு பொண்ணுதான் கண்டுபுடிச்சிருக்கனும்

**நீதன்**

மொதல்ல கடவுளோட அட்ரச கண்டுபுடிச்சு அவருக்கு ஒரு ஆண்ட்ராய்டு போனு வாங்கி குடுத்தூரனும்டா



அப்பதான் அவரு நம்ம வாழ்க்கைல விளையாடாம போனுல விளையாடிக்கிட்டு இருப்பாரு

**கோபிஷா**

புது வகையான சீட் பெல்ட்!!!



இதனால் 45% விபத்துக்கள் தவிர்க்கப்படுகின்றன!!!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பி[illegible]k.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இடம்பெற்றது படுகொலை அல்ல

## மனிதாபிமான யுத்தமாம்-உபரதன தேரர் விளக்கம்

(கொழும்பு)

**நாட்டில் இடம்பெற்ற போரானது மக்களைப் பாதுகாக்க மனிதாபிமான அடிப்படையில் நடத்தப்பட்டது என மொரகொல்லாகம உபரதன தேரர் தெரிவித்துள்ளார்.**

நேற்று அலரிமாளிகையில் நடைபெற்ற தர்ம உபதேச நிகழ்வில், உபதேசம் வழங்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நம் நாட்டில் பெரும் சபிக்கப்பட்ட யுத்தம் நடைபெற்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன், நாட்டின் சகல இராணுவத்தினரதும் ஒத்துழைப்புடன் இந்த நாட்டின் அனைத்து மக்களின் ஆசியுடன் மாபெரும் யுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால், இந்தப் போர் படுகொலை அல்ல. மக்களை பாதுகாத்து மனிதாபிமான அடிப்படையில் நடத்தப்பட்டது என அவர் தெரிவித்தார். (நி-5)

# மதுபான போத்தல்களுடன் இருவர் கைது

(கரணவாய்)

40 கால் போத்தல் மதுபானம் மற்றும் பியர் ரின்களுடன் இருவரை நெல்லியடி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் முச்சக்கர வண்டியில் 40 கால் போத்தல்கள் கொண்ட மதுபானம் மற்றும் 2 கேஸ் பியர் போத்தலையும் அனுமதியின்றி எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் இருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று பௌர்ணமி தினத்தன்று மதுபானசாலைகள் அனைத்தும் விடுமுறை உள்ளதால் கறுப்பு சந்தையில் விற்பதற்காக எடுத்துச் சென்றதாக தெரிய வந்துள்ளது.(4-5-60)

# துயர் பகிர்கின்றோம்

**அமரர்.திருமதி.நாகம்மா இராமச்சந்திரன்**

பிறப்பு–11.04.1939

இறப்பு–15.02.2022



எமது கல்லூரியின் பகுதித்தலைவர் திருமதி.சிவச்சந்திரா தவராஜா அவர்களின் தாயாரும் உப அதிபர் திரு.த.தவராஜா அவர்களின் மாமியாருமாகிய திருமதி. நாகம்மா இராமச்சந்திரன் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரது மறைவினால் துன்புற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பளை.

(10218)

# யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள பிரதான சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்

**01.04.2022 தொடக்கம் 31.03.2023 வரை**

யாழ்.போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துநர்களிடமிருந்து 01.04.2022 தொடக்கம் 31.03.2023 வரையான காலப்பகுதிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதான சிற்றுண்டிச்சாலையினை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

1. வைத்தியசாலை பகுதியில் உள்ள பிரதான சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்.
2. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் 'கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபாய் 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 17.02.2022 தொடக்கம் 10.03.2022 வரையான காலப்பகுதியில் (மு.ப.) 09.00 மணி தொடக்கம் (பி.ப.) 04.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 02.03.2022 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
4. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபாய் 50.000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது தங்களால் நடாத்துகின்ற உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும், குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும், மற்றும் சுகாதாரப் பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. விலைக் கேள்விகள் கடித உறையின் மேல் பகுதியில் சிற்றுண்டிச்சாலையின் பெயரினைக் குறிப்பிட்டு 11.03.2022 திகதி (மு.ப.) 10:00 மணிக்கு முன்பதாக இப்போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் அன்றைய தினம் (11.03.2022) (மு.ப.) 11:00 மணிக்கு கேள்வி நேர முடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்தியசாலையிலிருந்து 10 கி.மீ.உட்பட்டிருப்பதுடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
8. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில்/தொலைபேசி இலக்கங்களுடன் 021 222 2260, 021-222 7764 தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
9. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
10. மேற்படி வைத்தியசாலையின் பிரதான சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப்பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்த காலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

**தலைவர்.**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(c-3791)

# இராசிபலன்

17.02.2022
மாசி 05, வியாழக்கிழமை
பிரதமை முன்னிரவு 11.40 மணிவரை
மகம் பிற்பகல் 5.08 மணிவரை
சுபநேரம் - 8.03-9.33 மணிவரை
இராகுகாலம் -2.03-3.33 மணிவரை
சந்திராஷ்டமம்
உத்தராடம், திருவோணம்
அமிர்த சித்தம்

**வள்ளவன்**

**மேஷம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் குடும்ப பொறுப்பறிந்து நடந்து கொள்வார்.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, செய் தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்க உதவ முன்வருவரலாம், முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**மகரம்** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், குடும்பத்தினரிடையே தேவையற்ற விவாதங்கள் ஏற்படலாம், பயணங்களில் விழிப்புணர்வு அவசியம், முயற்சிகளில் தாமதமுண்டு.

**ரிஷபம்** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்புண்டு, பயணங்களில் பலனுண்டு.

**சிம்மம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்கனை அறிந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவிகேட்டு வரலாம், தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாடு ஆனந்தம் தரும்.

**மீனம்** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை சங்கத்திற்கும் வடமாகாண அரச சேவைப் பட்டதாரி உத்தியோகத்தர் சங்கத்திற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கடந்த 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. குறித்த சந்திப்பின் போது அபிவிருத்தி உத்தியோகத்தர்களது பதவி உயர்வு, சம்பள சீராக்கம், சேவை பிரமாணக் குறிப்பினை மாற்றியமைத்தல், இடமாற்றக் கொள்கைகளை தயாரித்து நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் வடக்கு மாகாண அரச சேவை பட்டதாரி உத்தியோகத்தர் சங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கான புரிந்துணர்வு ஒன்றும் குறித்த கலந்துரையாடலின் போது எட்டப்பட்டது. (படம்:-சுபேசன்)

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் புலிகளாக சித்திரிப்பு

## சித்தார்த்தன் எம்.பி.குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)


**ஐ.நா.மனித உரிமைப்பேரவையின் கூட்டம் நெருங்கி வரும் நிலையில் வடக்கு-கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை முன்னாள் போராளிகளாக காட்ட அரசாங்கம் பகீரத பிரயத்தனம் செய்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா.ஆணையாளரின் அறிக்கை இம்முறை கடுமையானதாக இருக்கும் . இலங்கை தமிழர்களுக்கு, அரசு செய்து வரும் செயல்களை அவர்கள் அறிவார்கள். ஆகவே அடுத்த மாதம் நடைபெறும் ஐ.நா. சபை அமர்வில் அந்த அறிக்கை பாரப்படுத்தப்படும். அத்துடன் இந்த அறிக்கைக்கான செயற்பாடுகள் தொடர்பில் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. சபையில் உறுதியான தீர்மானம் வெளிப்படும்.

அரசாங்கத்திற்கு ஆதரவாக, விடயங்களைத் திரட்டி, அதனை சர்வதேசத்துக்கு காண்பிக்கவே நீதி அமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் நீதிச் சேவை முகாம்களை வடக்கில் மேற்கொண்டனர். அவர்களின் பயணம் நீதிக்கான பயணம் இல்லை.

எங்கள் மத்தியில் பிழைகள் உள்ளது போன்று காட்டவே இவ்வாறு அவர்கள் செய்கின்றனர். அதிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களை முன்னாள் போராளிகளாக காட்டுவதற்கு பெரும் முயற்சி எடுத்து வருகின்றனர். ஆகவே நாம் எமது எதிர்ப்புகளை பாராளுமன்றிலும் சரி, ஏனைய விடயங்களிலும் சரி தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருவோம் என தெரிவித்தார். (4-5-33)



மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கு 42 இலட்சம் ரூபாய் பெறுமதியான நவீன கண் சத்திரசிகிச்சை இயந்திரம் மூளாய் கூட்டுறவு மருத்துவமனை நிர்வாகத்தினரிடம் காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த மருத்துவர் அமரர். இளையதம்பியின் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகளினால் அண்மையில் கையளிக்கப்பட்டன. (படம்:- கஜிந்தன்)

# பொதுமக்கள் முறைப்பாடு செய்ய நல்லூர் பிரதேச சபையால் தொலைபேசி இல. அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வாழும் மக்களுக்கு சேவைகளை வழங்கும் முகமாக சோலை வரி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நல்லூர் தொகுதிக்குட்பட்ட மக்களுக்கு வீதியோர துப்புரவு பணிகள் தற்சமயம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக வாய்க்கால் துப்புரவு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படுகின்ற மேலும் அனுமதியின்றி வீதிகளில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்ற விளம்பரப் பலகைகள் அகற்றுகின்ற செயற்பாடுகளும் தற்சமயம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

தொடர்ந்தும் நல்லூர் பிரதேசசபை முன்னெடுக்கப்படுகின்ற ஒரு செயற்பாடாக ஆடியபாதம் வீதி இருபுறமும் அழகுபடுத்துகின்ற திட்டத்திற்கு அமைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு முன்னால் நடைபாதை அமைக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதை கொக்குவில் இந்துக் கல்லூரி உடன் இணைக்கும் செயற்றிட்டம் இரண்டாம் கட்டமாகவும் மூன்றாம் கட்டமாக திருநெல்வேலி சந்திப் பகுதியை அழகுபடுத்தும் செயற்றிட்டமும் நான்காம் கட்டமாக செம்மணி வளைவு அழகுபடுத்தல் செயற்றிட்டமும் தொடர்ந்து அதனூடாக நடை பாதைகளை அமைப்பதற்கு நல்லூர் பிரதேசசபை தீர்மானித்துள்ளது.

மேலும் நல்லூர் பிரதேச சபையில் முறைப்பாட்டு தொடர்பு சேவை ஒன்று ஏற்படுத்தப்பட்டு அச்சேவை இடம்பெற்று வருகிறது. உங்களுடைய முறைப்பாடுகளையும் உங்களுடைய அத்தியாவசிய அடிப்படைத் தேவைகளையும் அதன் ஊடாக நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

அந்த வகையில் 021 222 2701 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக பொதுமக்கள் தமது முறைப்பாட்டை பிரதேச சபைக்கு தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்தார். (4-5-33)

# ஹெரோயின், கசிப்புடன் இருவர் கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் நேற்று அதிகாலை ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் கசிப்பு ஆகியன கைப்பற்றப்பட்டதுடன், சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ராஜ்மோகன் மற்றும் மதுவரி பரிசோதகர் ரசிகரன் ஆகியோர் தலைமையிலான குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

சாவகச்சேரி-கல்வயல் பகுதியில் 450 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவரும் நுணாவில் பகுதியில் 730 மில்லிக்கிராம் ஹெரோயினுடன் ஒருவருமே இவ்வாறு கைதாகியுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் இருவரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் ஹெரோயினுடன் கைதான நபரை 14 தினங்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன், கசிப்புடன் கைதான நபருக்கு பிணை வழங்கப்பட்டது. (4-5-30)

# பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்து செய்யக் கோரி

## யாழில் கையெழுத்து வேட்டை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் கையெழுத்துப் போராட்டமொன்று நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்தின் முன்பாக இடம்பெற்றது.

மேற்படி போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணித் தலைவர் கந்தசாமி பிருந்தாபன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான கேசவன் சயந்தன், ச.சுகிர்தன், யாழ்.மாநகர சபையின் பிரதி முதல்வர் து.ஈசன், யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் இ.ஆர்னோல்ட், வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தி.நிரோஷ், வலி.மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் த.நடனேந்திரன், தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியினர், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



மேற்படி கையெழுத்துப் போராட்டத்தின் ஒரு பகுதியாகப் பொதுமக்களுக்குத் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (4-5-18-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் மஹரகம தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியை உளமார வாழ்த்துகிறோம்



Congratulations

## கல்வித் தகைமை

முதுநிலை விஞ்ஞானமாணி (கணிதக் கல்வி சிறப்பு) - கொழும்பு பல்கலைக்கழகம்

முதுநிலை கல்விமாணி (தகவல் தொடர்பாடற் கல்வி சிறப்பு)- வூலொங்கொங் பல்கலைக்கழகம்,அவுஸ்திரேலியா

பட்டப்பின் டிப்ளோமா (செயல்முறை ஆராய்ச்சி)- மொறட்டுவை பல்கலைக்கழகம்

இளநிலை பட்டதாரி (கணிதமும் புள்ளிவிபரவியலும்- பேராதனை பல்கலைக்கழகம்

## தொழில் தகைமை

பட்டப்பின் டிப்ளோமா (கல்வி முகாமைத்துவம்) - கல்வி முகாமைத்துவ நிலையம், மீபே- தேசிய கல்வி நிறுவகம்

பட்டப்பின் கல்வி டிப்ளோமா- தேசிய கல்வி நிறுவகம் , மஹரகம

ஆசிரியர் பயிற்சி (கணிதம் சிறப்பு) -பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, யாழ்ப்பாணம்



## சேவை விபரங்கள்

ஆசிரியர் (கணிதம் )- ஹேரல்புறூக் தமிழ் மகாவித்தியாலயம் -அக்கரப்பத்தனை (1985-1990)

ஆசிரியர் (கணிதம் உயர், சாதாரண)- ஹைலன்ஸ் மத்திய கல்லூரி -ஹட்டன் (1990-1994)

ஆசிரியர் (உயர்தர கணிதம், பௌதிகவியல்)- புனித அந்தோனியார் கல்லூரி,கண்டி (1994-1995)

விரிவுரையாளர் (கணிதம்) -ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி- பத்தனை (1995-2003)

விரிவுரையாளர் கணிதம் (கணித கற்கை நெறி மீளமைப்பு தலைவர்)

-தேசிய கல்வி நிறுவகம்- சீசேல்சுமக்கள் குடியரசு (RePublic of Seychelles) (2003-2005)

சிரேஷ்ட விரிவுரையாளர் (கணிதம், தொடர்பாடற் தொழில்நுட்பம்) - ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி-பத்தனை (2005-2013)

உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்) - பஸ்துன்ரட்ட தேசிய கல்வியியற் கல்லூரி, களுத்துறை (2013-2016)

பீடாதிபதி- தேசிய கல்வியியற் கல்லூரி , மஹரகம (2016 இலிருந்து இன்றுவரை)

## திரு. யோகராஜா கிருபானந்தன்

ஆரம்பக் கல்வி - மகேஸ்வரி வித்தியாசாலை,பூநகரி

இடைநிலைக் கல்வி - பூநகரி மகா வித்தியாலயம்

உயர்தரம் : மானிப்பாய் இந்துக் கல்லூரி (1978-1981)

(10229)

**வாழ்த்துவோர்: மஹரகம தேசிய கல்வியியற் கல்லூரியின் 2016-2018 அணி முகிழ்நிலை ஆசிரியர்கள்.**



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா:26 ¼ சூரி 5 செவ் 10 இல்<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்: MSc Electronic Engineer UK சிற்றிசன்<br>எதிர்பார்ப்பு:A/L இற்கு மேல் படித்த பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/1798 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா:34 சூரி 7 செவ் 10 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:BAபட்டதாரி முகாமைத்துவ் உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி<br>தொ.இ:G/8563 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:28 சூரி , செவ் 2 இல்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்: சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10453 | பிறப்பு:1976 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 4<br>கி.பா:22 ½ சூரி 7 செவ் 8 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: BSc/ அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:சொந்த தொழில் அல்லது மத்திய கிழக்கு நாடுகள்<br>தொ.இ:G/8572 |
| பிறப்பு:1983 இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி.பா : சூரி 1 செவ் 12 இல்<br>உயரம்:169 cm<br>தகைமை/தொழில்: Bachelor of Construction Technology Draughtsman (படவரைஞர்)<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12295 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: சூரி 4 செவ் 1 இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:BSc/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ:G/8587 |
| பிறப்பு:1980 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி 2<br>கி.பா:சூரி 5 செவ் 6 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L களஞ்சியக் காப்பாளர் NGO<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் தொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12296 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:38 சூரி 3 செவ் 11 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/ தொழில்:HNDA தபாலதிபர்<br>எதிர்பார்ப்பு:உயர்பதவி<br>தொ.இ:G/8589 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொடர்புகொள்ளும்
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


## வர்த்தக அமைச்சர் டுபாய் பயணம்



(கொழும்பு)

வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று டுபாய்க்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

இருதரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் நோக்கிலேயே, பந்துல குணவர்தன டுபாய்க்கு பயணமாகியுள்ளார். (ஙி)


# THE YOUNG MEN'S CHRISTIAN ASSOCIATION- JAFFNA

Proudly Presents

**The Best Performance Appreciation Award for Students of GCE A/L Examination 2020, Northern Province**

- First Rank (GCE A/L Examination 2020) Rs.35,000/= Cash Prize, Shield & Certificate
- Second Rank (GCE A/L Examination 2020) Rs.25,000/= Cash Prize, Shield & Certificate
- YMCA Jaffna Debate Shield to the winner of the Inter School Debate, each Participant will receive a cash voucher of Rs. 5,000/-
- Bilingual Excellence Award of Rs 20,000/- each for a Male and Female winner
- Best All-rounder's Award of Rs 35,000/- each for a Male and Female winner
- Best Medical Student Award of Rs 35,000/- (University of Jaffna)
- Best Physical Science Student Award of Rs 35,000/- (University of Jaffna)
- Best Engineering Student Award of Rs 35,000/- (University of Jaffna)
- Best Nursing Students Award of Rs 35,000/- (University of Jaffna)
- Best Computer -Eng Student Award of Rs 35,000/- (University of Jaffna)
- Best Agriculture Science Student Award of Rs 35,000/- (University of Jaffna)
- Two deserving schools to be presented, books worth of Rs 50,000/- each

*Chief Guest*
**Rt.Rev.Dr.Justin B Gnanapragasam**
The Bishop,
Roman Catholic Diocese of Jaffna
Jaffna

*Guest of Honor*
**Hon. Jeevan Thiagarajah**
Hon. Governor,
Northern Province.

*Special Guests*
**Mr.K.Mahesan**
District Secretary,
District Secretariat,
Jaffna.

**Mr.T.JohnQuintuss**
Additional Provincial
Director of Education
Northern Province

**Mr.M.Rathakrishanan**
Zonal Director,
Jaffna Education Office,
Jaffna.

**Mr.J.Vilvarajah**
Founder
Western Tamil School
Canada.

We have great pleasure in inviting the Members and Well-wishers to participate at the Award Ceremony to be held on *Saturday 19th February 2022 at 03.00pm,* at the Main Hall, YMCA.

(ரி-3789)

*President, Board of Directors,*
*General Secretary & Staff, YMCA Jaffna.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபுபடுத்தப்பட்டு வரும் ஆனைக்கோட்டை முத்திரை


ஆனைக்கோட்டை முத்திரை தொடர்பாகச் சமீபத்தில் வெளிவந்த ஆய்வுகள் சிலவற்றில் முத்திரையில் பொறிக்கப்பட்டிருந்த சில எழுத்துக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு அதற்குப் புதிய வாசிப்பும், புதிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டு வந்திருப்பதைக் காண முடிகின்றது.

முத்திரையில் காணப்படும் எழுத்துக்களுக்கு அறிஞர்கள் வேறுபட்ட வாசிப்புக்களும், விளக்கங்களும் கொடுத்து வருவது அவர்களுக்குரிய சுதந்திரமாகவே நோக்கப்படும். ஆனால் அவற்றின் எழுத்துக்களை மாற்றிவிட்டு அதற்கு புதிய வாசிப்புகளும் விளக்கங்களும் கொடுப்பதைத் திட்டமிட்ட வரலாற்றுத் திரிபாகவே பார்க்கப்படும். இத்தவறுகளை ஊடகங்கள் மூலம் அறிஞர்களுக்கும், வரலாற்று ஆர்வலர்களுக்கும் மக்களுக்குத் தெரியப்படுத்தவே இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

கடந்த காலங்களில் ஆனைக்கோட்டை முத்திரையின் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிய ஊடகங்கள் தமது சேமிப்பில் இருக்கும் ஆனைக்கோட்டை முத்திரையின் திரிபுபடுத்தப்பட்ட புகைப்படங்களை நீக்கவும், எதிர்காலத்தில் இவ்வாறான புகைப் படங்களை பிரசுரிப்பதைத் தவிர்க்கவும் முன்வந்தால் மிக்க மகிழ்ச்சி அடைவோம்.

யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே ஏறத்தாழ 5.5 கிலோ மீற்றர் தொலைவில் ஒரு குக்கிராமமாக இருந்த ஆனைக்கோட்டை 1980 களின் பின்னர் தொல்லியல், வரலாற்று அறிஞர்களாலும், வரலாற்று ஆர்வலர்களாலும் அதிகம் பேசப்படும் ஒரு வரலாற்று இடமாக மாறியுள்ளது.

இதற்கு அக்கிராமத்தில் முன்னெடுக்கப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்களும், அவற்றுடன் கிடைத்த கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை மோதிரமும் முக்கிய காரணங்களாகும். 1980 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையில் இளம் தொல்லியல் ஆசிரியராக இணைந்த பொன்னம்பலம் இரகுபதி (ஓய்வுநிலைப் பேராசிரியர் உத்கல பல்கலைக்கழகம், ஒறிசா, இந்தியா) தனது முதல் தொல்லியல் ஆய்வுப் பணிகளில் ஒன்றாக தன் மாணவர்களுடன் இணைந்து ஆனைக்கோட்டையில் தொல்லியல் ஆய்வினை முன்னெடுத்திருந்தார்.




இந்த ஆய்வின் மூலம் அங்கு ஆதியிரும்புக்கால (பெருங்கற்கால) மக்கள் வாழ்ந்துள்ளனர் என்ற உண்மை முதன் முதலாகத் தெரிய வந்தது. இவ்விடத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்த பேராசிரியர் கா.இந்திர பாலா தலைமையிலான ஆய் வுக் குழுவினர் அங்கு 1980 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் விரிவான அகழ்வாய் வினை மேற்கொண்டிருந்தனர்.

இந்த ஆய்வில் வரலாற்றுத்துறையுடன் ஏனைய துறைசார்ந்த ஆசிரியர்களும் மாணவர்கள் சிலரும் பங்கெடுத்தனர். இவ்வகழ்வாய்வின் மூலம் ஏறத்தாழ 2200 ஆண்டுகளுக்கு முன்னரே ஆனைக்கோட்டையில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்ற உண்மை உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும் 'கந்தரோடையை அடுத்து யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது பெருங்கற்கால மையம் என்ற பெருமையையும் இது பெற்றது. இருப்பினும் கந்தரோடையுடன் ஒப்பிடும் போது ஆனைக் கோட்டை அகழ்வாய்வு இரு அம்சங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது. ஒன்று யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களது மனித எலும்புக் கூடுகள் இரண்டு முதன் முதலாக ஆனைக்கோட்டை அகழ்வாய்வின் போதுதான் கண்டு பிடிக்கப்பட்டது.

இரண்டாவது இந்த மனித எலும்புக்கூட்டுடன் பெயர் பொறித்த முத்திரை மோதிரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இதுபோன்ற முத்திரை மோதிரம் ஆனைக்கோட்டையைத் தவிர தென்னாசியாவின் வேறு எந்தவொரு பெருங்கற்கால ஈமச்சின்ன மையங்களிலும் கண்டு பிடிக்கப்படவில்லை.

இம்முத்திரை மோதிரத்தின் மேல் பகுதியில் சிந்து வெளி எழுத்தை நினைவுபடுத்தும் மூன்று குறியீடுகளும். அக்குறியீடுகளுக்குக் கீழே மூன்று பிராமி எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இம்முத்திரை தென்னாசிய வரலாற்று ஆய்விற்குப் புதிய சான்றாதாரமாகக் கிடைத்திருப்பதால் சாசனவியல் அறிஞர்கள் பலரும் தமது பிராமிச் சாசனங்கள் பற்றிய ஆய்வுகளில் ஆனைக்கோட்டை முத்திரை மோதிரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். அதிலும் தமிழ் எழுத்தின் தோற்றம், தமிழ் மொழியின் தொன்மை பற்றிய ஆய்வுகளிலும், கருத்தரங்குகளிலும் இம்முத்திரைக்கு முதன்மையிடம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அண்மைக் காலத்தில் வெளிவந்த சில ஆய்வுகளிலும், கருத்தரங்குகளிலும் இம்முத்திரை மோதிரத்தின் உண்மையான புகைப் படத்திலும், அதன் வரைபடங்களிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டு அதன் வாசத்திற்கு புதிய வாசிப்பும், அதற்குப் புதிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இச்செயற்பாடுகள் ஆனைக் கோட்டை முத்திரையில் இருந்து அறியப்பட்ட வரலாற்று உண்மைகளைத் திரிபு படுத்துவதாக உள்ளது. ஆனைக்கோட்டை அகழ்வாய்வை முன்னெடுத்த அறிஞர்களால் உத்தியோகபூர்வமாகப் பிரசுரிக்கப்பட்ட முத்திரையின் எழுத்துகளை மீள் வாசிப்பு செய்வதும், அதற்குப் புதிய விளக்கம் கொடுப்பதும் ஆரோக்கியமான ஆய்வு முறையாகும்.

அதற்குப்பததிலாக அதன் எழுத்துக்களில் மாற்றங்களைச் செய்துவிட்டு அதற்குப் புதிய வாசகமும், விளக்கமும் கொடுத்திருப்பது மோசடியான வரலாற்று அணுகுமுறையாகும். இது பற்றிய முறைப்பாடுகள் அண்மையில் எனக்கும் கிடைத்துள்ளன. இதனால் ஆனைக்கோட்டை ஆய்வில் மாணவனாகப் பங்கெடுத்தவன் என்ற முறையிலும், வரலாற்றுத்துறை ஆசிரியனாகக் கடமையாற்றியவன் என்ற வகையிலும் ஆனைக்கோட்டை முத்திரையின் உண்மை நிலை பற்றிக் கூறுவதை எனது கடமையாகவும் பொறுப்பாகவும் கருதுகின்றேன்.

இம்முத்திரை மோதிரம் ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எமும்புக் கூட்டின் தலைமாட்டுப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த மண் சட்டியொன்றில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டது. இம்முத்திரை கண்டுபிடிக்கப் பட்ட இடத்தில் வைத்தே உரிய முறையில் துப்புரவு செய்யப்பட்டு அது யாழ்ப்பாண வளாகத் தலைவராக இருந்த பேராசிரியர் க.கைலாசபதி யின் கையில் வைத்து பல கோணங்களில்




ப.புஸ்பரட்ணம்
வரலாற்றுத்துறை பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருளியல் துறை விரிவுரையாளர் வி.பி. சிவநாதனினால் (பொருளியல்துறை ஓய்வு நிலைப் பேராசிரியர்) படமெடுக்கப்பட்டன. அப்போதைய சூழ்நிலையில் கறுப்பு – வெள்ளைப்படம் எடுக்கும் சூழ்நிலையே காணப்பட்டது.

அவ்வாறு எடுக்கப்பட்ட புகைப்படத்திலிருந்தும், முத்திரையில் இருந்தும் படிக்கப்பட்ட "கோவேத" என்ற பெயரை வைத்தே பேராசிரியர் கா.இந்திபாலா மற்றும் பொ.இரகுபதி ஆகியோரால் இந்து பத்திரிகையில் விரிவான இரண்டு கட்டுரைகள் முதன் முதலாகப் பிரசுரிக்கப்பட்டன. இதன் சமகாலத்தில் உள்ளூர் ஆங்கிலம் மற்றும் தமிழ்ப் பத்திரிகைகளில் இப்படத்தை ஆதாரமாகக் கொண்டு பல கட்டுரைகளும், செய்திகளும் வெளிவந்தன. அவற்றுள் தமிழில் வெளியிடப்பட்ட கவிஞர் சேரனின் (பேராசிரியர் சமூகவியல், கனடா) "சிந்துவெளியில் இருந்து வழுக்கியாறுவரை ஒரு எழுத்தின் பயணம்", என்ற கட்டுரையும், கவிஞர் ஜெயபாலனின் "கற்காலக் கிழவியும், குறுந்தாடி அழகனும்" என்ற தலைப்பிலான கவிதையும் முக்கியமானவை.

(9 ஆம் பக்கம் பார்க்க...)

## முத்திரையின் புகைப்படத்திலும் வரைபடத்திலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாற்றங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபுபடுத்தப்பட்டு வரும் ...

(8 ஆம் பக்க தொடர்ச்சி...)

இவற்றின் தொடர்ச்சியாகப் பாடசாலை, பல்கலைக்கழக சஞ்சிகைகளினதும், ஆய்வு நூல்களினதும் அட்டைப் படங்களை அலங்கரிப்பதில் ஆனைக்கோட்டை முத்திரை முக்கிய இடம் பிடித்தது. இந்நிலையில் சிந்து வெளி நாகரிககால எழுத்துப் பற்றி ஆய்வை மேற்கொண்ட தமிழகத்தின் முதன்மைச் சாசனவியலாளரில் ஒருவரான ஐராவதம் மகாதேவன் 1980 களில் எடுக்கப்பட்ட ஆனைக்கோட்டை முத்திரையின் புகைப்படத்தையே முக்கிய ஆதாரமாகக்கொண்டு தனது ஆய்வை முன்னெடுத்துள்ளார்.

அவ்வாறே தமிழகத்தில் தமிழ்ப் பிராமி பற்றி ஆய்வு செய்த பேராசிரியர்களான எஸ்.ரமேஸ், வை.சுப்பராயலு, க.இராசன், எஸ். இராஜவேலு மற்றும் கலாநிதி சு.இராஜவேலுவும், தென்னிலங்கையில் பேராசிரியர் அனுராமனதுங்க, பேராசிரியர்ராஜ்சோமதேவ முதலியோரும் இப்புகைப் படத்தைப்பயன்படுதியுள்ளனர்.

இவ்வாறு பலதரப்பட்ட அறிஞர்களால் ஆய்வு செய்யப்பட்ட ஆனைக்கோட்டை முத்திரை தொடர்பான வேறுபட்ட வாசகங்களையும், பொருள் விளக்கங்களையும் கருத்தில் எடுத்த பேராசிரியர் இந்திரபாலா 25 ஆண்டுகள் கடந்த நிலையில் மீண்டும் இம்முத்திரையை விரிவாக ஆய்வு செய்து அதன் வரலாற்று முக்கியத்துவம் பற்றி எடுத்துக்காட்டியுள்ளார். அவற்றை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும்.


"கோவேத என்ற சொற்தொடர் பிராகிருத மொழியைச் சேர்ந்தது அன்று. இதனைக் கோவேத எனப் பிரிக்கலாம். இது சமகாலத்துத் தமிழ் நாட்டுத் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் சொற்றொடர்களாகிய "கோ ஆதன்", "கோபூதி விர" ஆகிய சொற்றொடர்களுடன் ஒப்பிடத்தக்கது.

இதில் வரும் "கோ" மன்னனைக் குறிக்கும் ஆதித் தமிழ்/ திராவிடச் சொல்லாகும். முத்திரைகளிலும், நாணயங்களிலும் வரும் பெயர்கள் பொதுவாக ஆறாம் வேற்றுமை உருபுடன் (அதாவது உடைய என்ற பொருள்படும் சொல் இறுதியுடன்) காணப்படும்.

இதேபோன்று, ஆனைக் கோட்டை முத்திரையிலும் பெயர் ஒன்று ஆறாம் வேற்றுமை உருபுடன் காணப்படுகின்றது. அந்த உருபு பழந் தமிழில் காணப்படும் "அ" உருபு ஆகும்".

அண்மையில் ஆனைக் கோட்டை முத்திரையை நேரில் பார்த்து படமெடுக்கவும்,

2021 இல் எடுக்கப்பட்ட முத்திரையின் பின்பக்கப் புகைப்படம்



அதுபற்றிய மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது. இம்முத்திரை மோதிரம் எவ்வகையான மூலப்பொருள் கொண்டு செய்யப்பட்டதென்பதில் அறிஞர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் நீண்ட காலமாக இருந்து வந்தன.

இந்நிலையில் தமிழக அறிஞர்கள் இது ஸ்டிட்டைட் எனப்படும் ஒரு வகைக் கல்லில் செய்யப்பட்டதென்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இம்முத்திரைக்கல் 10.2. மி.மீ.நீளமும், 10.6 மி.மீ. அகலமும், 5.05 மி.மீ, தடிப்பும், 1.9 கிராம் நிறையும் கொண்டது. இக்கல்லை முத்திரை மோதிரமாக பயன்படுத்தும் நோக்கில் கல்லின் பின்பக்கத்தில் சற்சதுரமான சிறிய பீடம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

அதன் இரண்டு பக்க விளிம்பில் காணப்படும் சிறிய அடையாளங்கள் மோதிரத் திற்குரிய வளையம் பொருந்தியிருந்ததை உறுதிப்படுத்துவதாக உள்ளன. ஆயினும் அந்த மோதிர வளையம் என்ன மூலப்பொருள் கொண்டு செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆயினும் அது ஸ்டிட்டைக் கல்லினால் செய்யப்பட்டிருக்க முடியாதென்பது தெரிகின்றது. இக்கல்லின் முன் பக்கத்தில் முத்திரையாகப்பயன்படுத்தப்பட்ட குறியீடுகளும், பிராமி எழுத்துக்களும் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அவற்றைப் பல கோணங்களில் கலர் படமாக எடுத்துப் பார்த்த போது அவை 1980 களில் பேராசிரியர் சிவநாதனால் எடுக்கப்பட்ட கறுப்பு- வெள்ளைப் படங்களில் இருந்து சிறிதும் மாறுபடவில்லை.

உண்மைகள் இவ்வாறு இருக்கும் போது அண்மைக்கால ஆய்வுகள் சிலவற்றில் இம்முத்திரையின் குறியீடுகளிலும், பிராமி எழுத்துக்களிலும் ஏன் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பது தெரியவில்லை.

இதன்மூலம் ஆனைக் கோட்டை முத்திரையில் இருந்து புதிய வரலாறு படைத்துவிட்டதாகப் பெருமை கொள்வது இதன் நோக்கமாக இருந்திருக்கலாம். இதனால் ஆனைக்கோட்டை முத்திரையின் வரலாற்றுப் பெறுமதியும், அதனால் அறியப்பட்ட வரலாற்று உண்மைகளும் திரிபுபடுத்தப்படுகின்றது என்ற உண்மைகளை ஏன் அவர்கள் மறந்துவிடுகின்றனர்?

(முற்றும்)

# நீரில் மூழ்கி இரு சிறுமிகள் பலி குருநாகலில் சோகம்

(குருநாகல்)

குருநாகல் - வில்பாவ வாவியில் மூழ்கி இரு சிறுமிகள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குருநாகல் வில்பாவ வாவியில் நீராடச் சென்ற நான்கு சிறுமிகளில் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நான்கு சிறுமிகளும் நீராடிக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கியுள்ளனர்.

இதனை அவதானித்த பிரதேசவாசிகள் அவர்களை மீட்டுள்ளனர்.

இதன்போது கவலைக் கிடமாக இருந்த 3 சிறுமிகளை குருநாகல் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மூவரில் இரு சிறுமிகள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த சிறுமிகள் 13 மற்றும் 14 வயதுகளையுடைய குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

குருநாகல் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பாரிய நட்டம் ஏற்படும்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இம் மாதத்தில் மட்டும் 11 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படலாம் என அத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டும். அல்லது எரிபொருளுக்கான வரிச்சலுகைகளை வழங்க வேண்டும் என நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர், சட்டத்தரணி சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழலில் எரிபொருட்களின் விலை தொடர்ந்தும் இவ்வாறு பேணப்படுமாயின், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாரிய நட்டத்தை எதிர்நோக்க வேண்டியேற்படும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

[illegible]னால் எதிர்காலத்தில் நாட்டின் எரிபொருள் விநியோகம் நெருக்கடிக்கு உள்ளாகும்.

இதனை கருத்திற்கொண்டு எரிபொருள் மீதான வரியை குறைக்குமாறு அல்லது எரிபொருள் விலை அதிகரிப்பை துரிதப்படுத்துமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (நி-5)

# கொள்ளையில் ஈடுபடும் கும்பலை பொலிஸார் தடுக்க வேண்டும்

## பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இரவு வேளைகளில் வாள்களுடன் நடமாடும் கும்பல் ஒன்று வீதிகளில் பயணிப்போரை அச்சுறுத்தி கொள்ளையில் ஈடுபடும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் நிலையில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் விசனம் வெளியிடுகின்றனர்.

பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணியளவில் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து மீது கோப்பாய் சமிக்ஞை விளக்கு பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது.

அப் பகுதியில் இருந்த இராணுவத்தினர் உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று அவர்களைத் தடுக்க முற்பட்டனர்.

இதன்போது அந்தக் கும்பல் அந்த இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளது. எனினும் தப்பிச் சென்ற குழுவில் இருந்த ஒருவர் அப்பகுதியில் இருந்த இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தெரியப்படுத்திய போதும் ஒன்றரை மணித்தியாலத்துக்கு மேல் சம்பவ இடத்துக்கு கோப்பாய் பொலிஸார் வரவில்லை. பின்னர் அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டபோதே கோப்பாய் பொலிஸார் அந்த இடத்திற்கு வந்தனர்.

பேருந்து சாரதி ஆசனத்திற்கு அருகில் வைக்கப்பட்டிருந்த 2 லட்சம் ரூபாய் பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது என பேருந்து உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடந்த புதன் கிழமை சுன்னாகம் பகுதியில் இருந்து புத்தூர் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த குடும்பத்தலைவர் ஒருவர் தாக்குதலுக்கு உள்ளானார்.

அவர் பயணித்த முச்சக் கர வண்டியை கும்பல் ஒன்று நிறுத்தியது. அவர் முச்சக்கர வண்டியை நிறுத்தாமல் செல்ல முற்பட்ட போது, அந்த கும்பல் அவரை தலைக்கவசத்தினால் தாக்கியதால் அவர் கையில் காயம் அடைந்தார்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் இவ்வாறான பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும் இதனைத் தடுக்க பொலிஸார் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (4-5-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2022-14.03.2022

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**உறவினர்களை உபசரிப்பதில் உள்ளம் மகிழும் துலாம் இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், தன- சப்தமாதிபதி செவ்வாயோடு இணைந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே வருமானம் திருப்தியாக இருக்கும்.

### ராகு-கேது ஆதிக்கம்

உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் ராகுவும், 2 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். எனவே எதிர்பாராத சில மாற்றங்கள் ஏற்படலாம். நாக தோஷத்தின் பின்னணியில் இருப்பதால் ஏற்றமும், இறக்கமும் கலந்த வாழ்க்கையே உருவாகும். வரவும் செலவும் சமமாகும். இன்பமும், துன்பமும் கலந்து வரும். எனவே ஒரு சில காரியங்களை திட்டமிட்டுச் செய்ய இயலாது. 2 இல் கேது இருப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா? என்பது சந்தேகம்தான். குடும்பத்தில் பழைய பிரச்சினை மீண்டும் தலைதூக்கும்.

### மகர-சுக்கிரன் சஞ்சாரம்

மாசி மாதம் 14 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிநாதன் சுக்கிரன் சுகஸ்தானத்திற்கு செல்வது நல்லதுதான். ஏற்கனவே அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் உள்ளது. இப்பொழுது சுக்கிரனும், புதனும் சனியோடு இணைந்து செயற்படப் போகிறார்கள். 'புத சுக்கிர யோகம்' செயற்படும் இந்த நேரத்தில் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். ஆரோக்கியத் தொல்லையில் இருந்து விடுபட, புது மருத்துவம் கைகொடுக்கும். இடம், பூமி வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். எதைச் செய்ய நினைத்தாலும் அதை உடனடியாகச் செய்து முடிக்கும் ஆற்றல் பிறக்கும்.

## வருமானம் திருப்தியாக இருக்கும்!

### உச்ச செவ்வாய் சஞ்சாரம்

மாசி 14 ஆம் திகதி, மகர இராசிக்கு செவ்வாய்செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் உச்சம் பெறும் இந்த நேரம், நற்பலன்கள் கிடைக்கும். அர்த்தாஷ்டமச் சனியோடு செவ்வாய் இணைவதால் குடும்பப் பிரச்சினை தலைதூக்கும். எதையும் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. என்றாலும் மன பயமும் அடிக்கடி வந்து போகும். செலவு இருமடங்காகும்.




வளர்ச்சிப் பாதையில் தளர்ச்சி ஏற்படாமல் இருக்க இக்காலத்தில் வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

### கும்ப-புதன் சஞ்சாரம்

மாசி 17 ஆம் திகதி, கும்ப இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடத்திற்கு அதிபதியானவர் புதன். அவர் பஞ்சம ஸ்தானத்திற்கு வரும் பொழுது பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடலாம். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினை அகலும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். தொழில் நடத்துபவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த முயற்சிப்பீர்கள். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. இம்மாதம் அபிராமி அம்மன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் கூடுதல் கவனத்துடன் செயற்படுங்கள். அர்த்தாஷ்டமச் சனியோடு செவ்வாயும் இணைவதால் விரயங்கள் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டால் பிரச்சினைகள் ஏற்படாது. பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு வேலைப் பளு கூடும். எதிர்பாராத விதத்தில் உத்தியோக மாற்றங்கள் உருவாகலாம்.



**புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் விருச்சிக இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, தன ஸ்தானத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், சுக்கிரனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே 'சுக்கிர மங்கள யோகம்' ஏற்படுகிறது. எனவே மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். தொழில் ஸ்தானத்தை குரு பார்ப்பதால் எதிர்பார்த்தபடியே தொழில் முன்னேற்றமும் இலாபமும் கிடைக்கும்.

### ராகு-கேது ஆதிக்கம்

உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் ராகுவும், இராசியிலேயே கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் பலன் கிடைக்கும். ஆரோக்கியத்தில் சிறுசிறு அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் உடனுக்குடன் சரியாகிவிடும். சுபவிரயங்கள் உண்டு. சப்தம ராகுவால் வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல் கிடைக்கும். பொதுவாழ்வில் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். ராகு-கேது பெயர்ச்சிக்குள், சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

### மகர சுக்கிரன் சஞ்சாரம்

மாசி மாதம் 14 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3 ஆம் இடமான சகாய ஸ்தானத்திற்கு சுக்கிரன் செல்வதால் வாழ்க்கைத் துணையின் வழியே உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். உதிரி வருமானங்கள் உண்டு. அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவால் ஒருசில காரியங்களைத் திட்டமிட்டுச் செய்து முடிப்பீர்கள். சப்தம விரயாதிபதியாக சுக்கிரன் விளங்குவதால் இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்பும் உண்டு. தொழில் வெற்றி நடைபோடும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

## தொழில் முன்னேற்றமும் இலாபமும் கிடைக்கும்!

### உச்ச செவ்வாய் சஞ்சாரம்

மாசி 14 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்லும் செவ்வாய், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிநாதன் உச்சம் பெறும் இந்த நேரம் ஒரு பொன்




னான நேரமாகும். தொழில் வளர்ச்சியும், பொருளாதாரத்தில் உயர்வும் வந்து சேரும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்வீர்கள். வீடு கட்டும் யோகம் அல்லது வீடு வாங்கும் யோகம் உண்டு. அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு தலைமைப் பொறுப்புகள் தானாக வரலாம்.

### கும்ப - புதன் சஞ்சாரம்

மாசி 17 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டம-லாபாதிபதியாக விளங்குபவர் புதன். அவர் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாகன யோகம் ஏற்படும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வெளிநாட்டில் உள்ள நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். இம்மாதம் பிரதோஷ விரதமிருந்து நந்தியெம்பெருமானையும், சிவன் உமையவளையும் வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும் மாதம் இது. வருமானம் போதுமானதாக இருக்கும். வசதி வாய்ப்புகள் பெருகும்.

கணவன் - மனைவிக்குள் அந்நியோன்னிய உறவு உண்டு. உங்கள் பெயரிலேயே இடம் வாங்க இல்லத்தினர் சம்மதிப்பர். பிள்ளைகளுக்கு சுப காரியங்கள் நடத்த முன்வருவீர்கள். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கலாம். பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்து ஆதரவும், கேட்ட சலுகைகளும் உண்டு.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தின் மூலம் கிடைத்த அதிகாரங்கள் பறிபோகும் நிலையில்

## சுரேஸ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**இந்திய அரசாங்கத்துடன் நாங்கள் தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பில் இன்னமும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவில்லை. 13 ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்களை அமுல்படுத்துமாறு தான் நாங்கள் கேட்கின்றோம் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**



தமிழ் கட்சிகள் இணைந்து நடத்திய "ஈழத்தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய சர்வதேச நிலவரங்களும்" எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு நேற்றுப் புதன்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளும் இணைந்து இலங்கைக்குச் அழுத்தங்களை வழங்கியிருந்த நிலையில் கடந்த காலங்களில் பல தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. எனினும், இந்தத் தீர்மானங்களை இலங்கை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்தியது கிடையாது. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் ஒருசில சொற்கள் மாற்றப்பட்டிருப்பது போன்ற சில விடயங்கள் மாத்திரமே ஆங்காங்கே நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறது. இவைதவிரத் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராகவில்லை.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் ஊடாக முன் வைக்கப்பட்ட தீர்மானங்களில் தமிழ்மக்களுக்கு ஒரு புதிய அரசியல் சாசனம் வேண்டும், வடக்கு- கிழக்கில் இராணுவம் குறைக்கப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், அரசியல் கைதிகளின் விடுதலை எனப் பல விடயங்கள் கோரிக்கைகளாக முன் வைக்கப்பட்டிருந்த போதும் அவை இன்னமும் நடைமுறைக்கு கொண்டு வரப்படவில்லை.

இலங்கையில் ஒரு இனப் படுகொலை நடந்ததாக நாங்கள் மீண்டும் மீண்டும் கூறி வந்த போதும் உலக நாடுகள் அதனை முழுமையாக ஏற்றுக் கொண்டு தீர்மானமாகக் கொண்டுவராத துர்ப்பாக்கிய நிலை தொடர்ந்து வருகின்றது.

தற்போதைய அரசாங்கம் எம்மிடம் எஞ்சி உள்ளவற்றையும் பறிக்கும் மோசமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.இவ்வாறான நிலை தொடர்ந்தால் யுத்தத்தின் மூலம் எமக்கு கிடைத்த அற்பசொற்ப அதிகாரங்களும் இல்லாது போகும் நிலைமை தான் காணப்படுகிறது.

புதிய அரசியல் அமைப்பில் என்ன தீர்வாக வரப் போகிறது என இதுவரை தெரியாது. அந்த தீர்வு ஒரு மோசமானதொரு தீர்வாகக் கூட இருக்கலாம். 13 ஆம் திருத்தம் மூலம் எங்களை முடக்கிவிடுவார்கள் என ஒரு தரப்பினர் ஒருவித அச்சத்தை எங்களுக்கு ஏற்படுத்துகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (4-5-18)

# மாபெரும் போராட்டத்திற்கு உறவுகள் அழைப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சியில் எதிர்வரும் 20 ஆம் திகதி மாபெரும் போராட்டம் இடம் பெற வுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி அறிவித் துள்ளார். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி அறிவித்துள்ளார். நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர் போராட்டத்தினை ஆரம்பித்து எதிர்வரும் 20ம் திகதி ஐந்து ஆண்டுகள் ஆகின்றது. இலங்கை அரசிடம் தீர்வுகோரி கிடைக்காத நிலையில் சர்வதேசத்திடம் நீதி கேட்டு நாங்கள் போராடி வருகின்றோம். இந்த நிலையில் குறித்த நாளன்று மாபெரும் பேரணி ஒன்றினை மேற்கொள்வதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

வடக்கு கிழக்கில் இருக்கின்ற அனைத்து தரப்பினரும் இந்த அழைப்பினை ஏற்று குறித்த தினத்தில் இடம்பெறும் மாபெரும் பேரணியில் கலந்து கொண்டு ஆதரவினை வழங்க வேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார்.(4-5-100)

# சிறுபோக நெற்செய்கையை விரைவுபடுத்துங்கள்

## நீர்ப்பாசன பொறியியலாளர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெருமாள் குளத்தின் மிகுதி புனரமைப்பு வேலைகளை முன்னெடுக்க வேண்டி உள்ளதன் காரணமாக சிறுபோக நெற்செய்கையினை விவசாயிகள் விரைவுபடுத்த வேண்டும் என வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. கடந்த ஆண்டு அம்பலப்பெருமாள் குளத்தின் முக்கிய வேலைகள் தொடங்கப்பட்டன. அவ்வேலைகள் சில நிறைவு பெறாமல் உள்ளன. இவ்வாண்டு அவ்வேலைகள் நிறைவு செய்ய வேண்டி உள்ளது.

குளத்தின் நீர் திறந்து விட வேண்டி உள்ளதால் சிறுபோக நெற்செய்கையினை விரைவு படுத்துவதற்கான முயற்சிகளில் விவசாயிகள் ஈடுபடுங்கள்.

சிறுபோக நெற்செய்கையில் உரப் பிரச்சனை உள்ளது. கிளிநொச்சி நகரத்தில் யூரியா தவிர்ந்த ஏனைய உரங்கள் உள்ளன.

சிறுபோகம் முடிந்து குளத்தின் நீர் திறந்து விடப் படும் போது உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான வாய்ப்பு இருந்தால் அதற்கான முயற்சிகளிலும் ஈடுபடலாம் எனவும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார். (4-5-350)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 220 | 250 | 220 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 130 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 550 | 600 | 600 | 500 |
| தக்காளி | 260 | 220 | 240 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 90 | 50 |
| கோவா | 160 | 170 | 200 | 200 |
| கரட் | 400 | 550 | 550 | 600 |
| பூசணி | 160 | 140 | 140 | 200 |
| புடோல் | 250 | 200 | 180 | 280 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 200 |
| பாகற்காய் | 250 | 250 | 300 | 350 |
| வெண்டிக்காய் | 240 | 240 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 400 | 450 | 400 | 400 |
| லீக்ஸ் | 180 | 220 | 200 | 240 |
| பீற்றூட் | 250 | 220 | 300 | 300 |
| கறிமிளகாய் | 500 | 500 | 550 | 500 |
| முருங்கைக்காய் | - | - | 1000 | 1200 |
| போஞ்சி | 300 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | - | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 120 | 150 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-75 | 60-80 |
| இராசவள்ளி | - | 220 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 180 | 200 |
| முள்ளங்கி | 120 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | - | 80 | 160 |

# காட்டு யானை உயிரிழப்பு விசாரணையில் பெண் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒதியமலை கிராமத்தில் யானை ஒன்று மின்சாரவேலியில் சிக்கி உயிரிழந்துள்ளது.

விவசாய தோட்டம் ஒன்றிற்கு கட்டப்பட்ட மின்சார வேலியில் சிக்கி காட்டு யானை உயிரிழந்துள்ளது இச்சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சம்பவ இடத்திற்கு வருகைதந்து பார்வையிட்டுள்ளதுடன் ஒட்டுசுட்டான் பொலிஸாரும் விசாரணை நடத்தினர்.

இதன்போது விவசாய தோட்டக் காணியின் உரிமையாளரான 46 வயது பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் யானை உயிரிழப்பு தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். மின்சார வேலியில் தும்பிக்கையினை பிடித்தபடி யானை உயிரிழந்துள்ளது.(4-5-281)

# அம்பலப்பெருமாள் குளத்தில் 330 ஏக்கரில் சிறுபோகம்

(அக்கராயன்)

விவசாயிகள் சட்டங்களை மதித்து பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டும் என துணுக்காய் பிரதேச செயலாளர் திருமதி.ச.லதுமீரா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம் சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இம்முறை அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் 330 ஏக்கரில் சிறுபோகம் மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயிர்ச் செய்கையின் போது இக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். விவசாய சட்டங்கள் ஊடாகவே பயிர்ச் செய்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சட்டங்களை மீறி பயிர்ச் செய்கையில் ஈடுபடும் போதே பிரச்சனைகள் தோன்றுகின்றன. சட்ட ரீதியாக ஒழுங்குகளை பேணி விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் போது பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புகள் இல்லை. ஒற்றுமையாக விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வெற்றி பெற வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-5-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## விலைமதிப்பில்லாத பசு



மீண்டும் மிகவும் ஆத்திரப்பட்ட அந்த மனிதன் தன் இரண்டாவது மகனை கையில் கிடைத்த கம்பை எடுத்து அடித்து தூக்கத்திலிருந்து எழுப்பினான். கம்பால் அவனைத் துரத்தி அடித்து விட்டான்.

இரண்டாவது மகனும் எங்கெல்லாமோ உலவிவிட்டு கடைசியில் ஒரு கொல்லனின் வீட்டை அடைந்தான். அந்த கொல்லன் அவனைத் தன்னுடன் வைத்துக் கொண்டு கோடரி, மண்வெட்டி போன்ற விவசாயத்திற்கு பயன்படும் பொருட்களையும் வில், அம்பு போன்ற வேட்டைக்கு பயன்படும் பொருட்களையும் செய்வதற்கு கற்றுக் கொடுத்தான்.

"ஒரு நாள் உன் அப்பாவிடம் உன்னை ஒப்படைக்க வேண்டியிருக்கும். அப்போது, நீ அந்த பொல்லாத பசுவின் துணை இல்லாமல் வாழ்வதற்கு இவற்றைச் செய்ய தெரிந்து வைத்துக் கொள்வது உதவியாக இருக்கும்" என்று கூறினான் கொல்லன். தன்னுடன் இருந்த இரண்டு மகன்களை பிரிந்து விட்ட அந்த மனிதன் தன் செல்லப் பிள்ளையான மூன்றாவது மகனை அனுப்பிப் பசுவை மேய வைத்து அழைத்து வரச்சொன்னான். "உன்னையும் உன் அண்ணன்களைப் போல விரட்டும் நிலை வந்து விட்டால் நான் மிகவும் மனவருத்தம் கொள்வேன்" என்று எச்சரிக்கை செய்தான்.

மூன்றாவது மகன் பசுவை அழைத்துக் கொண்டு புறப்பட்டான். பசுமையான புல்வெளிக்குப் போனதும் அந்தப் பசு நன்றாக புற்களை மேய்ந்தது. பின் குளிக்கவும் செய்தது பிறகு அவன் பசுவை ஒரு மரத்தில் காற்றாடக் கட்டினான். அப்போது அங்கே வந்த அவனுடைய அப்பா பசுவிடம் "நீ உனக்குப் பசி அடங்கும் அளவுக்குச் சாப்பிட்டாயா?" என்று கேட்டார்.

ஹூம் என்ற பசு உன் செல்லப்பிள்ளையும் அவனுடைய அண்ணன்களைப் போலவே பொல்லாத பயல்தான். என்னைப் புல்லே இல்லாத காட்டுக்கு அழைத்துப் போய் விட்டு இங்கே கட்டிப் போட்டு சாகடிக்கப் பார்க்கிறான்" என்று சொன்னது. பசு சொன்னதைக் கேட்டு மிகவும் சோகம் அடைந்தான் அந்த மனிதன். அவன் தன் மூன்றாவது மகன் சொல்ல வந்ததை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவனையும் உடனே துரத்தி விட்டான். மூன்றாவது மகன் சுற்றி அலைந்து விட்டு ஒரு ஆசிரியரை சந்தித்தான். ஆசிரியர் அவனை அன்போடு அழைத்துச் சென்று படிக்கவும் எழுதவும் சொல்லிக் கொடுத்தான்.

தன் மகன்கள் மூன்று பேரும் இல்லாததால் தானே தன் பசுவை மேய்ச்சலுக்குக் கூட்டிப் போனான் அந்த மனிதன். பசு வயிறு புடைக்க புற்களை தின்றது. நிறையத் தண்ணீர் குடித்தது. பிறகு, பசுவிடம் "இப்போது உன் பசி அடங்கி விட்டதா?" என்று கேட்டான் அந்த மனிதன். அவனைப் பார்த்து சிரித்த பசு, சொன்னது "நீயும் உன் மகன்களைப் போலவே கொடுமைக்காரனாக இருக்கிறாய். நீ என்னை புல்லில்லா காட்டுக்குத்தான் கூட்டிச் சென்றாய். என்னை மேய வைக்கவும் இல்லை, தண்ணீர் காட்டவும் இல்லை. ஆனால், பசி அடங்கி விட்டதா என்று கேட்கிறாய்!"

பசு அவனிடம் சொன்ன பதிலை அவனால் நம்பவே முடியவில்லை. இத்தனை நாட்களாக பசு தன்னிடம் பொய்தான் சொல்லி இருக்கிறது என்று புரிந்து கொண்டான். அடக்க முடியாத கோபத்தில் பசுவை அடி அடி என்று அடித்தான். பிறகு அங்கேயே கட்டிப்போட்டான். பசு அந்த இடத்திலேயே இருந்து செத்துப்போய் விட்டது. அந்த மனிதன் தன் மகன்களை தேடித் தேடி பக்கத்தில் இருந்த ஊர்களுக்கு போய் கொண்டே இருந்தான். ஒரு இடத்திலும் அவனது மகன்களைச் சந்திக்க முடியவில்லை. பல வருடங்கள் மகன்களைத் தேடி அலைந்து கிழவனான நிலையில் திரும்பி தன் ஊருக்கே வந்தான். அது ஒரு சந்தை நாள் என்பதால் பசியாகவும் களைப்பாகவும் இருந்த அவன் சந்தைக்குப் போனால் சாப்பிட ஏதாவது கிடைக்கும் என நினைத்து அங்கே சென்றான் சந்தையை அவன் நெருங்கியபோது மயக்கம் போட்டு கீழே விழுந்தான். கீழே விழுந்த அவனது அலறல் சத்தம் சந்தையில் இருந்த அனைவருக்கும் கேட்டது. பயிர்களை விற்பதற்காக வந்த மூத்த மகனும் கருவிகளை விற்க எடுத்து வந்த இரண்டாவது மகனும் உணவுப் பொருட்கள் வாங்க வந்த மூன்றாவது மகனும் கூட அந்த அலறல் சத்தத்தை கேட்டார்கள். அந்த சத்தம் வந்த திசையில் ஓடிச் சென்று பார்த்த மூன்று பேரும் தங்கள் அப்பா தான் மயங்கிக் கிடக்கிறார் என்று உணர்ந்து கொண்டனர். அதே சமயத்தில் தாங்களும் சந்தித்துக் கொண்டனர்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்

வந்தவர்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி, இவ் வாலிபர்கள் தசரதன் நன்மக்கள் என்பதை எடுத்து உரைத்தார். இவர்கள் காவல் இருக்கத் தாம் கண்ணிய வேள்விகளைப்பண்ணி முடிக்கலாம்என்று உரைத்தார்.

வேள்வி தொடங்கியது; கேள்வி மிக்க முனிவர் அங்கு வந்து கூடினர்; "இனி அரக்கர் வந்து அழிவு செய்ய முடியாது"என்பதால்அச்சமும் அவலமும் நீங்கி, உவகை பெற்றுச் செயற்பட்டனர். தீயை வளர்த்து, உலகத்துத் தீமைகளை அழிக்க முயன்றனர்.

விசுவாமித்திரர் யோக நிலையில் அமர்ந்து, தம் வேகம் எல்லாம் ஒடுக்கி, மௌன விரதம் மேற்கொண்டார். ஆறு நாட்கள் இந்த வேள்வி தொடர்ந்தது; வேறு அரக்கர் வந்து தொடர்ந்து வேள்விக் குழிகளைக் குருதிச்




சேறு ஆக்காமல் இவ்விருவரும் ஊண் உறக்கம் இன்றி, வில் ஏந்திய கையராய்க் காவல் காத்து நின்றனர்.

### அரக்கருடன் போர்

தாடகை பட்டதும் அந்த அதிர்ச்சிமிக்க செய்தி அரக்கர்களைச் சுட்டது; அது காடு முழுவதும்எட்டி எதிர் ஒலித்தது. அவள் மாரீசன் சுபாகு என்பவனின் தாய் அரக்கர்களின் தலைவி, அக்கிரமங்களின் உறைவிடம் "அவள்வீழ்ந்தாள்" என்றதும் அரக்கர்கள் துயரில் ஆழ்ந்தனர்; கொதித்தனர்; திக்கெட்டும் முரசுகள் அதிர்த்தனர்; வான் எங்கும் குழுமினர்; அவர்கள் கொக்கரித்து இடி முழக்கம் இட்டனர்.

வானத்தில் கரிய மேகங்கள் சூழ்ந்திருப்பது போல் இவ்வரக்கர்கள் ஒருங்கு திரண்டனர் "தலைவியை வீழ்த்திய அந்தத் தறுகணாளர்களை அழிப்பது" என்று உறுதி கொண்டனர்; வேள்விப் புகை கிளம்பியது; அதைப் பற்றிக் கேள்விப் பட்டனர்; "இந்த முனிவர்களுக்கு என்ன துணிச்சல்?" அதை நினைத்து அவர்களுக்கு ஒரே எரிச்சல்.

மாமிசத் துண்டங்களை அந்த வேள்விக் குண்டங்களை நோக்கிவீசினர்; குருதிப் புனலை அக்குழிகளில் கொட்டி நெருப்பை அவிப்பதில் உறுதியாய் இருந்தனர். யாக மேடையைக்களப் பலிமேடை போலப்புலால் நாற்றம் வீசச் செய்தனர். கைவில்லை ஏந்தி நாண் ஏற்றி, அவர்கள் மீது அம்பு செலுத்தித் தொல்லைப்படுத்தினர். படைக் கலங்களை வீசி, அவர்கள் நெய்க் குடங்களை உடைத்தனர். விண்ணில் இருந்து அவர்கள், இவற்றை வீசுவது இராமன் கண்ணில் பட்டது.

"அவ்வரக்கர்களைச்சுட்டிக் காட்டி இரக்கம் சிறிதும்காட்டாமல்வீழ்த்துக" என்று இலக்குவனுக்கு அறிவித்தான். இலக்குவன் அவர்கள் மீது அம்பு செலுத்தி, அலறவைத்தான். இராமன் சரக்கூடம் அமைத்து, வேள்விச்சாலையை அவர்கள்தாக்குதலினின்று தடுத்துக் காத்தருளினான்.

அரக்கர்களின் ஆரவாரத்தைக் கண்டு, அருந்தவ முனிவர் அஞ்சி, இராமனை அணுகி முறையிட்டார்.

"அவர்கள் குறைகளைத் தீர்த்து அருள்வதாக அபயம் அளித்தான் "அஞ்சற்க" என்று கூறி அரக்கர்களைத் துஞ்ச வைத்தற்கு அம்புகளைச்செலுத்தினான். எதிர்க்க வந்த மாரீசன் அதிர்ச்சி அடைந்து, உயிர் தப்பி ஓடி விட்டான். சுபாகு என்பவன் மரணப் பிடியில் அகப்பட்டு அதிலிருந்து தப்ப முடியாமல் மடிந்து தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் என்பவன் தெய்வமாகலாம் நாம் இன்றே தொடங்க வேண்டும். முதல் அடியை எடுத்து வைப்போம்.

– சத்திய சாயி பாபா

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## வடக்கு ஆளுநரின் அறிவிப்பு செயலுருப் பெறவேண்டும்!

வட மாகாணத்தில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் கால்நடை உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் எனவும் குறிப்பாக மாடு வளர்ப்புத் திட்டங்களை பெருமெடுப்பில் மேற்கொள்ள வேண்டுமெனவும் இவ்விடத்தில் பல தடவைகள் குறித்துரைத்திருந்தோம்.

தவிர, கால்நடை உற்பத்தி முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் குறித்தும் கால்நடை வளர்ப்பவர்களுக்கு கால்நடை வைத்தியசாலைகளின் சேவை கிடைப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதையும் இப்பகுதியில் பிரஸ்தாபித்திருந்தோம்.

இவ்வாறு கால்நடை வளர்ப்பவர்களுக்கு, கால்நடை வைத்தியசாலைகளின் சேவை தேவைப்படும்போது கிடைக்காத சூழ்நிலைக்கான காரணங்களை, வெளிப்படுத்தி, வட மாகாண அரச கால்நடை வைத்தியர்கள் சங்கம் விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டிருந்ததும் தெரிந்ததே.

இந்நிலையில் வட மாகாணத்தில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அவர்கள் குறிப்பிட்டிருப்பது மன ஆறுதலைத் தருகிறது.

உண்மையில் வட மாகாணத்தில் மாடு வளர்ப்பு முயற்சி என்பது பெருமெடுப்பில் மேற்கொள்ளக்கூடியது.

இந்த முயற்சியில் வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கின்ற வேலையற்ற பட்டதாரிகளையும் ஈடுபடுத்த முடியும்.

இவ்வாறு மாடு வளர்ப்புத் திட்டத்தை பெருமெடுப்பில் முன்னெடுக்க விரும்புகின்றவர்களுக்கு கிளிநொச்சி மற்றும் வன்னிப் பிரதேசத்தில் ஏக்கர் கணக்கில் நிலங்கள் வழங்கப்பட்டு அதனூடாக மாடு வளர்ப்புத் திட்டத்தை முன்னெடுக்கலாம்.

இதற்கு மேலாக, மேய்ச்சல் தரைகளை ஒதுக்கியும் கால்நடைத் தீவனத்துக்கான ஏற்பாடுகளை உள்ளூரில் உருவாக்குவதன் மூலமும் மாடு வளர்ப்பை ஊக்குவித்து அதன் மூலமாகப் பால் உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

இவையாவற்றுக்கும் அப்பால், கால்நடை வைத்தியசாலைகளுக்கு உரிய வாகன வசதிகள், போதிய ஆளணி மற்றும் தேவையான இதர வளங்களைக் கொடுத்து கால்நடை வைத்தியசாலைகளின் சேவையை உச்ச திறனுடையதாக ஆக்க வேண்டும்.

இதனையும் கடந்து, கால்நடை வளர்ப்புத் தொடர்பான பயிற்சி வகுப்புக்களை பயனாளிகள் பெறுவதற்கும் ஆவன செய்யும்போது வட மாகாணத்தில் கால்நடை வளர்ப்பு உன்னதமான இடத்தைப் பெற்றுக் கொள்ளும் என்பது நிறுதிட்டமான உண்மை.

## இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்

### கடற்றொழில் அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடுவதை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் எனக் கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் விரைவில் இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கமும் கலந்துரையாடலுக்கான இணக்கத்தை தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.

பாதுகாப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ள படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ம)

## கிளிநொச்சியில் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட/ நீதவான் நீதிமன்றத்தில் நாளை மறுதினம் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் உள்ள மணல் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலவிற்பனைக்கான மணலினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரைமணித்தியாலம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியுமெனவும் ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதல் மிகவும் முக்கியமானது எனவும் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.(5,4)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்சமய கருத்தாடல்நிலைய சகவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.ரத்தினா க.திருவம்பலத்தின் "திருவரங்கனின் மனக்கோலங்கள்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான வீதி, திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாபூஷணம் செ.யோசப்பாலா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சா.சுதர்ஷன் கலந்து கொள்வார். (5-4)

## உயர்தர பரீட்சையில் ஆள்மாறாட்டம்

### பிக்கு ஒருவர் கைது

(கொழும்பு)

நடைபெற்றுக்கொண்டிருக்கும் உயர்தரப் பரீட்சையில், வெலிகம - கொக்மாதுவ பிரதேசத்தில் விகாரை ஒன்றின் பிக்கு ஒருவருக்காக, போலி தேசிய அடையாள அட்டையை பயன்படுத்தி பரீட்சை எழுதிய மற்றொரு பிக்குவை புத்தளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் புனித மரியாள் தமிழ் வித்தியாலய பரீட்சை மண்டபத்தில் வைத்து நேற்று முன்தினம் குறித்த பிக்குவைக் கைது செய்ததாக பொலிஸார் கூறினர்.

குறித்த பரீட்சை நிலையத்தில், 4 ஆவது நாளாக அந்த பிக்கு நேற்று முன்தினம் க.பொ.த. உயர்தர பரீட்சையின் சிங்களம் - பகுதி 2 பரீட்சையை எழுதிக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட சந்தேகத்துக்கு அமைய அவர் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியின் பொறுப்பில் எடுக்கப்பட்டு, பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்தே கைது செய்யப்பட்டுள்ள குறித்த பிக்கு பெலிஅத்த, இசுருபுர பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## விசுவமடுவில் கஞ்சாவுடன் சிறுவர்கள் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடுப்பகுதியில் நேற்று முன்தினம் வீதிச் சோதனை நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டவேளை கஞ்சா உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று சிறுவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் 15,16 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மூவரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியபோது மூவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ம)

## இடியன் துப்பாக்கியுடன் தேராவிலில் ஒருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேராவில் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி இடியன் துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தருமபுரம் பொலிஸார்தெரிவித்தனர்.(4,5,316)

## இரு அரசியல் கட்சிகளின் சின்னங்கள் நீக்கம்

அரசியல் கட்சிகளின் சின்னங்கள் அடங்கிய பட்டியலில் இருந்து 2 சின்னங்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரத்னபிரிய வினால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கிரீடம் மற்றும் விவசாயி ஆகிய சின்னங்கள் நீக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள சின்னங்கள் அடங்கிய பட்டியல் கடந்த ஜனவரி 21ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருந்தது. (ம)

## சத்திய தரிசனம்



- அன்பான ஆண்டவா அருளை அள்ளித்தா, அமைதியான வாழ்வு வாழ வழியைக் காட்டித்தா.
- அமைதி வேண்டுமே, மன நிறைவு வேண்டுமே, கருணை நிறைந்த கடவுள்-எம்மைக் காக்க வேண்டுமே.
- சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை, ஐந்துமே வாழும் வழிக்கு நமக்கு இங்கு வழியைக் காட்டுமே, அடி மனதில் நாம் விதைத்திடுவோமே, நல்ல செயலைச் செய்ய எமக்கு வழி காட்டுமே.
- அன்பு ஆண்டவா அருளை விரைந்து வழங்க வா. அன்பும் அறமும் நிறைந்து வாழ வழியைக் காட்டித்தா, அன்னை, தந்தை, குரு, தெய்வம் ஆசி வேண்டுமே, இறைவா மன நிறைவோடு வாழ வேண்டுமே.
- உண்மையே பேசி நாம் உயர்ந்திடுவோமே, உலகமே வியக்க நாம் வாழ்ந்திடுவோமே (உண்மையே).
- இனிமையாய் அன்புடன் பேசி மகிழ்வோம். அமைதியும் சாந்தியும் எமதாகுமே (3)
- வாருங்கள் வந்து கேளுங்கள், நல்ல பண்புகளைக் கேளுங்கள், சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை என்ற பண்புகளில் வாழந்திடுவோம். ஆர்வத்துடன் நாம் கற்றிடுவோம், அகிம்சை வழியிலே வாழ்ந்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

79

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### ஆன்மிகத்தில் ஓரை

தமிழ் கலண்டர்களில் பின் பக்கத்தில் ஓரை என்று ஒன்று குறிப்பிடப்பட்டு இருக்கும். இந்த ஓரையில் குறிப்பிடப்பட்டு இருக்கும் நேரம் எதற்காக பயன்படுகிறது? அந்த நேரத்தில் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக்கூடாது? என்பது நம்மில் பலருக்கும் தெரிவதில்லை.

ஓரை அறிந்து நடப்பவனை யாரும் ஜெயிக்க முடியாது என்பது சித்தர்கள் வாக்கு. ஒன்பது கிரகங்களில் ஏழு கிரகங்களுக்கு மட்டுமே ஓரை உண்டு. ராகு, கேது நிழல் கிரகங்கள் என்பதாலும், அவற்றிற்கு சுற்றுப்பாதை இல்லாத காரணத்தாலும் அவற்றிற்கு ஓரை கிடையாது.

பூமத்திய ரேகை, கடக ரேகை ஆகியவற்றை நமது முன்னோர்கள் எப்படி உருவாக்கினார்களோ அதேபோன்தான் ஓரைகளும் உருவாக்கப்பட்டன. சூரியனின் சுற்றுப்பாதை, சூரியனுக்கு அருகில் இருக்கக் கூடிய கிரகங்கள், தொலைவில் இருக்கக் கூடிய கிரகங்கள், அதனுடைய ஈர்ப்பு சக்தி, அதன் ஒளிக் கற்றைகள் பூமியை அடைவதற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கான கால நேரம் இதை எல்லாம் அடிப்படையாக வைத்துத்தான் நமது முன்னோர்களும், வானவியல் அறிஞர்களும் ஓரைகளை கணக்கிட்டுள்ளனர்.

இதன்படி வாரத்தின் முதல் நாளான ஞாயிறன்று முதல் ஓரையை சூரியனுக்கு அளித்தனர். அதற்கு அடுத்து சுக்கிரன், அதற்கு அடுத்து புதன் ஓரை, 4 ஆவது இடம் சந்திரனுக்கும், 5 ஆவது இடம் சனிக்கும், 6 ஆவது இடம் குருவுக்கும், 7 ஆவது இடம் செவ்வாய்க்கும் வழங்கினர். ஓரை என்பது சூரிய உதயத்தில் இருந்து கணக்கிடப்படுகிறது. அந்த நாளின் கிழமை அதன் முதல் ஓரையாக கொள்ளப்படுகிறது.

உதாரணமாக ஞாயிறு காலை முதல் ஒரு மணி நேரம் (6-7 மணி) சூரியனின் ஓரை. இதையடுத்து 7-8 மணி வரை சுக்கிரன் ஓரை, 8-9 மணி வரை புதன் ஓரை, 9-10 வரை சந்திரன் ஓரை, 10-11 வரை சனி ஓரை, 11-12 மணி வரை குரு ஓரை, 12-1 மணி வரை செவ்வாய் ஓரை. இதை யடுத்து மீண்டும் சூரியன் ஓரை துவங்கும். இதேபோல் செவ்வாய்க் கிழமை என்றால் அன்று காலை 6 முதல் 7 மணி வரை செவ்வாய் ஓரை, புதன்கிழமை என்றால் காலை 6-7 மணி வரை புதன் ஓரை, அதன் பின் ஒவ்வொரு மணி நேரமும் மேலே கூறப்பட் டுள்ள வரிசைப்படி ஓரை கணக் கிடப்படும்.

இவற்றில் சுக்கிரன் ஓரை, புதன் ஓரை, குரு ஓரை ஆகிய மூன்றும் நல்ல ஓரைகள் எனப்படுகிறது. எந்த ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டுமென்றாலும் – இந்த ஓரைகளில் துவங்கலாம்.

**சூரிய ஓரை:** சூரியன் ஓரையில் அரசு சம்பந்தப்பட்ட காரியங்கள், வழக்கு தொடர்பான விடயங்கள் மேற்கொள்ள சிறப்பானதாக இருக்கும்.

**சுக்கிர ஓரை:** சகல சுப காரியங்களுக்கு வீடு, நிலம், வண்டி வாகனம், ஆடை ஆபரணம் வாங்கவும் மிகவும் ஏற்றது. குறிப்பாக பெண்கள் தொடர்பு கொண்ட சகல காரியங்களிலும் நன்மை ஏற்படும். விவாயத்திற்கும், பயணங்கள் செய்யவும் நல்லது. **புதன் ஓரை:** கல்வி மற்றும் எழுத்துத் தொடர்பான வேலை தொடங்குவதற்கும் ஆலோசிப்பதற்கும் ஏற்ற நேரம். சுபகாரியங்கள் செய்யலாம். நேர்மையான விடயங்களைப் பற்றிப் பேசவும் முடிவெடுக்கவும் இந்த நேரம் உகந்தது. பயணங்கள் மேற்கொள்ளவும் செய்யலாம்.

**சந்திர ஓரை:** இந்த ஓரைகளில் திருமணம், சீமந்தம், குழந்தைகளுக்கு மொட்டையடித்து காது குத்துதல், பெண் பார்ப்பது, பதவியேற்பது, வேலைக்கு விண்ணப்பிப்பது, வங்கிக் கணக்கு துவங்குதல் ஆகியவற்றைச் செய்யலாம்.

இந்த ஓரை காலத்தில் எல்லா சுபகாரியங்களையும் செய்யலாம். குறிப்பாக பெண்கள் தொடர்பு கொண்ட காரியங்களுக்கும் மிகவும் ஏற்றது. வியாபார விடயமாகவோ அல்லது புனித யாத்திரையாகவோ பயணம் செய்ய ஏற்றது.

**சனி ஓரை:** சனி ஓரையில் நீங்கள் ஒருவருக்கு கொடுக்க வேண்டிய கடனை திருப்பிக் கொடுத்தால், மீண்டும் கடன் வாங்குவதற்கான சூழ்நிலையே இருக்காது. ஊழியர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளப் பாக்கிகள், நிலுவைத் தொகைகள் என எதுவாக இருந்தாலும், சனி ஓரையில் கொடுக்கும் பொழுது மிகவும் நல்ல பலன்களைத் தரும். வீட்டில் மரத்தை வளர்க்கும் பொழுது சனி ஓரை பார்த்து வளர்ப்பது அதிர்ஷ்டம் தரும்.

சனி ஓரையில் பாத யாத்திரை, நடை பயணம் போன்றவற்றை துவங்குவது பாவத்தைப் போக்கும். சனி ஓரையில் குடும்பத்தில் பிரச்சினைகளும், கணவன், மனைவிக்குள் வாக்கு வாதம் ஏற்படும் பொழுது மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. இந்த நேரத்தில் எழும் சர்ச்சைகள் மிகப் பெரிய அளவில் விஸ்வரூபமெடுக்கும் என்பதால் கவனம் அவசியம்.

**குரு ஓரை:** சுப ஓரையாக இருக்கும் குரு ஓரையில் புதிய தொழில் துவங்குவது, வியாபாரத்தை விருத்தி செய்வது, விவசாயம் செய்யத் துவங்குவது போன்ற விடயங்களை செய்வது வழக்கம். அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் வாங்கும் பொழுது சுப ஓரையான குரு ஓரையில் வாங்குவது அதிர்ஷ்டத்தை தரும். குரு ஓரையில் கண்டம் விட்டு கண்டம் செல்வதும், நீர்வழிப்பயணங்கள் மேற்கொள்வது, சட்டத்திற்குப் புறம்பான செயல்களை செய்வது போன்ற விடயங்களை செய்தால் தீராத ஆபத்து உங்களைத் தேடி வந்து சேரும்.

**செவ்வாய் ஓரை:** புதிய நிலம் வாங்குவது, விற்பது தொடர்பான விடயங்களை சார்ந்த செயல்களில் ஈடுபடும் பொழுது செவ்வாய் ஓரை பார்த்துச் செய்வது நல்லது. மருத்துவ உதவிகள் செய்வது, இரத்ததானம், உறுப்பு தானம் போன்ற விடயங்களை செய்யும் பொழுது செவ்வாய் ஓரையில் செய்யலாம்.

உங்களுடைய அதிகாரத்தை காண்பிக்கும் பொழுதும், ஒரு விடயத்தை கட்டுக்குள் கொண்டு வர வேண்டியது இருக்கும் பொழுதும் அழிவுக்கு உரிய கிரகமாக இருக்கும் செவ்வாய் ஓரையில் செய்வது நல்லது. செவ்வாய் ஓரையில் நல்ல விடயங்கள், சுபகாரியங்கள் செய்ய முடியாவிட்டாலும், வம்பு வழக்குகளுக்கு தீர்வு காணவும், பஞ்சாயத்து பேசவும் இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இறைவனுக்கு செய்யக்கூடிய தானங்களும், கொடைகளும் இந்த செவ்வாய் ஓரையில் செய்வது நல்லது. கிரக ஓரை காலம் அட்டவணை 21 காட்டப்பட்டுள்ளது.

### அட்டவணை 21 கிரக ஓரை காலம் *சுப ஓரை

| கிழமை | காலம் | 6-7 | 7-8 | 8-9 | 9-10 | 10-11 | 11-12 | 12-1 | 1-2 | 2-3 | 3-4 | 4-5 | 5-6 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | பகல் | சூரி | சுக்* | புத* | சந்* | சனி | குரு* | அங் | சூரி | சுக்* | புத* | சந்* | சனி |
| | இரவு | குரு* | அங் | சூரி | சுக்* | புத* | சந* | சனி | குரு* | அங் | சூரி | சுக்* | புதன்* |
| திங்கள் | பகல் | சந்* | சனி | குரு* | அங் | சூரி | சுக்* | புத* | சந் | சனி | குரு* | அங் | சூரி |
| | இரவு | சுக் | புத* | சந்* | சனி | குரு* | அங் | சூரி | சுக்* | புத* | சந்* | சனி | குரு* |
| செவ்வாய் | பகல் | அங் | சூரி | சுக்* | புத* | சந்* | சனி | குரு* | அங் | சூரி | சுக்* | புத* | சந்* |
| | இரவு | சனி | குரு* | அங் | சூரி | சுக்* | புத* | சந* | சனி | குரு* | அங் | சூரி | சுக்* |
| புதன் | பகல் | புத* | சந்* | சனி | குரு* | அங் | சூரி | சுக்* | புத* | சந்* | சனி | குரு* | அங் |
| | இரவு | சூரி | சுக்* | புத* | சந* | சனி | குரு* | அங் | சூரி | சுக் | புத* | சந* | சனி |
| வியாழன் | பகல் | குரு* | அங் | சூரி | சுக்* | புத* | சந்* | சனி | குரு* | அங் | சூரி | சுக்* | புத* |
| | இரவு | சந்* | சனி | குரு* | அங் | சூரி | சுக்* | புத* | சந்* | சனி | குரு* | அங் | சூரி |
| வெள்ளி | பகல் | சுக்* | புத* | சந்* | சனி | குரு* | அங் | சூரி | சுக்* | புத* | சந்* | சனி | குரு* |
| | இரவு | அங் | சூரி | சுக் | புத* | சந்* | சனி | குரு* | அங் | சூரி | சுக் | புத | சந்* |
| சனி | பகல் | சனி | குரு* | அங் | [illegible] | [illegible] | புத* | சந்* | சனி | குரு* | அங் | சூரி | சுக்* |
| | இரவு | புத* | சந் | சனி | குரு | அங்* | சூரி | சுக் | புத* | சந்* | சனி | குரு* | அங் |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 25 பேர்...

கொரோனாவால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 899 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## +1,217 பேருக்கு...

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 631,816ஆக அதிகரித்துள்ளது. (ம)

## பயங்கரவாத...

பயங்கரவாதத்திற்கான புதிய வரைவிலக்கணத்துடன் பயங்கரவாதக் குற்றமும் தண்டனைச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று தாம் நம்புவதாக, இம்மாத முற்பகுதியில் இடம்பெற்ற இராஜதந்திரிகளுக்கான மாநாட்டின்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

நாட்டின் பொதுச்சட்டத்தின் கீழ் தேவையான திருத்தங்களுடன் பயங்கரவாதம் தொடர்பிலான விடயங்களை விசாரிக்க வேண்டும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

தன நிதானய
திகதி - 2022.02.16
சீட்டிழுப்பு இலக்கம் - 710
A 14 19 27 29

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 16.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2975
I 06 07 35 70

மஹஜன சம்பத
திகதி 2022/02/16
சீட்டிழுப்பு இலக்கம் 4680
P 6 9 9 4 4 4

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.02.16
சீட்டிழுப்பு இலக்கம் 0021
மேஷம் 01 15 48 62 மேஷம்

மெகா பவர்
திகதி 16/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1028
B 14 34 43 62 72

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1212
மேஷம் 2 3 3 3 1 7

## தேசிய இனப்...

றது.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று காலை இடம்பெற்ற கருத்தரங்கில் தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனும் தமிழீழ விடுதலை இயக்கம் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரனும் தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தாவும் பங்கேற்று உரையாற்றியிருந்தனர்.

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைத்தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர்களான நிலாந்தன், ஏ.யதீந்திரா ஆகியோரும் பங்கேற்று உரையாற்றினர்.

எனினும் தமிழரசு கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா இந்நிகழ்வில் பங்கேற்கவில்லை என்பதுடன் அக்கட்சியின் பிரதிநிதிகள் யாரும் குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

ஆறு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியப் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்த நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டல்களை வழங்குவதற்காக இந்த மக்கள் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-33)

## ஐ.நா தீர்மானங்...

ரீதியான அணுகுமுறையையே எதிர்பார்க்கின்றது."

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

உலகில் இன்று பல பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ளன. அவை இன்று வெடிக்கும் கட்டத்துக்கு வந்துவிட்டன. இப்படி உலகில் பல பிரச்சினைகள் இருக்கும் போது, இலங்கை மட்டும் இலக்கு வைக்கப்படுவது ஏன்? இது நியாயமா? உலக அமைதிக்கு இலங்கையால் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படுவதில்லை.

நல்லிணக்கம் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். இது உணர்வுபூர்வமான விடயமாகும். இப்பிரச்சினைக்கு ஒரே இரவில் தீர்வை கண்டுவிடமுடியாது. நீடித்து நிலைக்கக்கூடிய நிலையானதொரு தீர்வை நாம் எதிர்பார்க்கின்றோமெனில், அதற்கான பொறிமுறை நாட்டின் கலாசாரம் மற்றும் நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கமையவே தயாரிக்கப்பட வேண்டும். இது தொடர்பில் எமது நாட்டில் பரந்துபட்ட விடயங்கள் இடம்பெறுகின்றன. இதனை சர்வதேசம் ஏற்க வேண்டும். பக்கச்சார்பின்றி இலங்கை தொடர்பில் பார்வையைச் செலுத்த வேண்டும் என்றார். (ம)

## ஒருபோதுமே...

ஆறு கட்சிகள் இணைந்து நேற்று நடத்திய ஈழத் தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வும் தேசிய, பிராந்திய, சர்வதேச நிலைவரங்களும் கருத்தரங்கு நேற்று கல்வியங்காடு இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு பேசும்போதே விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "சென்ற வாரம் இந்தியப் பத்திரிகையொன்றின் இலத்திரனியல் ஊடகத்திற்கு ஒரு பேட்டி அளித்தேன். அங்கு நான் கூறிய ஒரு விடயம் பத்திரிகைகளில் வெளிவரவில்லை. அதனை இப்பொழுது உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

இதுகாறும் பிரிந்து நின்ற ஆறு கட்சிகளும் எவ்வாறு ஒருமித்து அந்தக் கடிதத்தை பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுத முடிந்தது என்று செவ்வி கண்டவர் என்னிடம் கேட்டார்.

அதற்கு நான், எமது அரசியல் குறிக்கோள்களைப் பொறுத்தவரையில் எமக்குள் அதிகம் வித்தியாசம் இல்லை என்றேன். அவற்றை அடையும் மார்க்கம் பற்றியே எமக்குள் முரண்பாடுகள் உண்டு என்றேன். அதை விளக்குமாறு கோரப்பட்டபோது, நான், எமது தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்துமே 'ஒற்றையாட்சி வேண்டாம் சமஷ்டி ஆட்சி முறையே வேண்டும்' என்றுதான் கோரி வருகின்றோம் என்றேன்.

எமது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஒருபடி மேலே போய் கூட்டு சமஷ்டியை எமது குறிக்கோளாகக் குறிப்பிட்டுள்ளோம் என்றேன். ஆகவே எமது குறிக்கோள் ஒன்றே. அதனை அடையும் விதத்தில் எமக்குள் வேற்றுமைகள், வித்தியாசங்கள், முரண்பாடுகள் உண்டு என்றேன். நான் அங்கு கூறியதை இங்குள்ள அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன். ஏதோ காரணத்திற்காக செவ்வி கண்டவர் இக்கேள்வியையும் பதிலையும் தணிக்கை செய்துவிட்டார்.

ஆகவே முக்கியமான ஒரே குறிக்கோளை வைத்திருக்கும் எமது ஆறு கட்சிகளும் இன்று இந்த கருத்தரங்கத்தை ஒருமித்து நடத்துவதில் வியப்பொன்றுமில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (ம-33)

## வட...

பின்போது, சுகாதார அமைச்சின் மலேரியா எதிர்ப்பு பிரசாரத் திட்டப் பணிப்பாளர், ஆலோசகர் சமூக வைத்தியர் பிரசாத் ரணவீர மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

நான்கு வாரங்களுக்குள் நாட்டில் நான்கு மலேரியா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவற்றுள் தொடர்ந்து இரண்டு வாரங்களுக்குள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்திற்குள் மொத்தம் ஆறு மலேரியா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள்.

அவர்களில் நான்கு நோயாளிகள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

## முன்னாள்...

வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு எதிர்வரும் பெப்ரவரி 20ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் நாட்டின் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திபால சிறிசேன யாழ்.மாவட்டத்துக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். (ம-104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1657 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 16.02.2022 தினம் புதன்
L 07 16 23 29
அடுத்த சுப்பர் ஜக்பொட் 59,567,864/-

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.16
சீட்டிழுப்பு இல: 3818
ரூ.2,471,060/-
வெற்றி இலக்கங்கள் 05 18 57 70 I

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ.4,203,423/-
திகதி 16.02.2022
சீட்டிழுப்பு வாரம் 3369
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 27 54 58 59 கடகம்
3085607
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,780,580/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
C 15 09 15 60 71
சீட்டிழுப்பு வாரம் 833
2022.02.16 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 213,518,893/-

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1812
சீட்டிழுப்பு திகதி 16.02.2022
வெற்றி இலக்கங்கள் 23 29 31 65 E
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 31,577,540/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.16
சீட்டிழுப்பு இல: 1483
ரூ.3,639,840/-
15 26 27 74 R

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு செல்ல முற்பட்டவர்கள் உட்பட
# வடமாகாணத்தில் மேலும் 13 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு செல்ல முற்பட்ட 07 பேர் உட்பட வடக்கில் மேலும் 13 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் ஊடாக பரிசோதனைக்கு உட்பட்டவர்களில் 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை ஊடாக பரிசோதனைக்கு உட்பட்டவர்களில் ஒருவர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் ஊடாக பரிசோதனைக்கு உட்பட்டவர்களில் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலை ஊடாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 07 பேர் PassPort இற்காக பரிசோதனை மேற்கொண்டவர்கள் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருவர் உயிரிழந்த நிலையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட குப்பிளான் கிராமத்தினைச் சேர்ந்த பெண் என்றும் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## விடுவிக்கப்...

வழங்கப்போவது யார்? என்று சட்டத்தரணியும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளருமான அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானின் ஆலோசனையின்படி இறுதி யுத்தகாலப்பகுதியில் இயக்கத்திற்காக கொழும்பில் நிதி சேகரித்து வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19 ஆம் திகதி பயங்கரவாதப் புலனாய்வுப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட கந்தப்பு ராஜசேகர், கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் நிரபராதி என்று தீர்ப்பளிக்கப்பட்டு 12 வருடங்களின் பின்னர் நேற்று முன் தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடை சட்டத்தின் மிகமோசமான சரத்துக்கள் நபரொருவரைத் தன்னிச்சையாகக் கைதுசெய்வதற்கும் எவ்வித விசாரணைகளுமின்றி 18 மாதங்கள்வரை தடுத்துவைப்பதற்குமான அதிகாரத்தை வழங்குவதுடன் அது சந்தேகநபர்கள் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவதற்கும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதற்கும் வழிவகுக்கின்றது என்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மனித உரிமை ஆர்வலர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டிவருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் அரசியல் கைதியான கந்தப்பு ராஜசேகர் 12 வருடங்களின் பின்னர் நிரபராதி என்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வெளியான செய்தியை மேற்கோள்காட்டி, தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இட்டிருக்கும் பதிவிலேயே சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார். (ம)

## கோவிட்டுக்கு மருந்து தயாரித்த
# தம்மிக்க பண்டாரவின் தம்பி கொரோனாவால் பலி

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்கு மருந்து தயாரித்ததாக விளம்பரம் செய்த உடுமாகம 'தம்மிக்க பண்டார' எனப்படும் தனபால கங்கணம்கேவின் இளைய சகோதரர் கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இவர், கடந்த 12ஆம் திகதி இரவு தனது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிரேத பரிசோதனையில் அவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது.

உயிரிழந்தவர் கேகாலை, ஹெட்டிமுல்ல, மகுரகனே கொடதென்ன பகுதியைச் சேர்ந்த 58 வயதான அப்புக்குட்டி கங்கணமலகே ஹீன்பண்டா என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம)


## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கு, பலாலி வீதி, வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் இருந்து 50m தூரத்தில் உள்ள 8 பரப்பு காணி 2 பரப்பாக பிரித்து விற்கப்படும். (கனேசா வித்தியாலயத்திற்கு அருகில்) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (10220)

**076 940 1045**

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10236)

**076 825 7716** (ஆகாஸ்)

## மணமகள் தேவை

1977, இந்து கௌரவ குடும்பம். திருவோண நட்சத்திரம், 56 ½ கிரக பாவம் உடைய அரச உத்தியோக மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (10149)

**077 728 6050**

## வரலாறு பாடம் கற்பிக்கப்படும்

6 இல் இருந்து O/L, A/L வரையான வகுப்புகளுக்கு வரலாறு பாடம் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.

**இடம் : யாழ்ப்பாணம்.** (10235)

**077 744 4794**
**077 290 3762**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் ரோட்டில் 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம். (வாகையடி சந்தி) (10234)

**074 269 0854**

## விரைவு பொதிகள் சேவை
## V2 TRAVELS
## UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3785)

**0768226240** DHL

## ஊடக நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை

- செய்தித் தொகுப்பாளர்
- செய்தி வாசிப்பாளர்
- வீடியோ எடிட்டர்
- நிகழ்ச்சித் தொகுப்பாளர்

(10237)

**076 126 6682**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 14 அடி பாதையுடன்
- தேவைக்கேற்ப பிரித்துக்கொடுக்கப்படும்
- நிலப்பரப்பு
- A32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்
- பயன்தரும் 137 தென்னைகள் உள்ளன
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்)

**தரகர் தேவையில்லை**

ஒரு பரப்பின் விலை 3.50.000/=

பார்வையிடும் நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு

**077 814 7389, 077 117 8578**

## காணி விற்பனைக்கு




யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் மறவன்புலவு பகுதியில் மறவன்புலவு மத்தி, அம்மன் கோயிலடியில் 4 பரப்புக் காணி புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுடன் விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு) A32 பிரதான வீதியில் இருந்து 600 மீற்றர் தூரம் (10227)

பார்வையிடும் நேரம்

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

**தரகர் தேவையில்லை.**

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு

**077 814 7389, 077 117 8578**

## 30 நாட்களில் ஆங்கிலம்

Spoken English with Grammer

DVD மற்றும் பயிற்சி புத்தகம்

**1000/=** (10219)

**077 088 5678**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 22 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- A32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்

ஒரு பரப்பின் விலை 3,00,000/=

பார்வையிடும் நேரம்

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

**தரகர் தேவையில்லை** (10209)

தொடர்பு

**077 814 7389, 077 117 8578**

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு மேசன் மற்றும் உதவி ஆட்கள் தேவை. (10228)

**076 200 4827**
**077 558 8835**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.